தென்றல்

ஆசிரியர் : கண்ணதாசன்

> " போற்றுபவர் போற்றட்டும் ;
> —புழுதிவாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும் ;
> தொடர்ந்து செல்வேன் !
> ஏற்றதொரு கருத்தை என(து)
> உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் ; எவர்வரினும்
> நில்லேன் ; அஞ்சேன் ! "

உள் நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளி நாடு மூன்றணா. | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-14.

மலர் 1	சென்னை 20—11—1954 சனிக்கிழமை	இதழ் 21

புதுப் பொருள் காண்போம் !

இடையில் வந்தோர், இலக்கியத்தைக் கெடுத்தனர் !

திராவிட இன மக்களின் ழில் மிக்க வாழ்க்கையிலே ரிய இன கலாச்சாரம் தூவப் ட்டது என்பதை மறுப்பார் வரும் இலர். வாழ்க்கையில் ட்டுமல்ல வாழ்வின் உறு ணையாக இருந்த தமிழர்தம் லயிலும் கூட 'எது ஆரியம்- து தமிழ்' என்று எளிதில் ரிக்கமுடியாத அளவிற்கும்- ரித்தால் பொருள் குன்றும் ன்மையிலும் இழைப்பு வேலை டைச்செருகல்களாய் புகுத் ப்பட்டிருக்கிறது. தமிழ் லக்கியங்களிலிருந்து ஆரியக் ள களைக்தெரியப்பட வேண் ம் என்றஎண்ணம் உள்ளத்தே ருந்தாலும், எவர் என்ன சால்வரோ - பெரும்புலவர்கள் ப்பரோ நம் செயலை என்ற ச்சம்மேலிட-இலக்கியங்களில் ணப்படுவதைப் படிக்க-படித் தை அப்படியே எடுத் ரைக்க-கேட்கப்படும் ஐயங் ருக்கு-ஓட்டை ஆதாரங்களை புதிய புதிய தத்துவார்த் களையும் கூறிவிட்டு தப்பித் க் கொள்கின்றனரே தவிர- ரும்பாலான தமிழ்ப் புலவர் உண்மையான இலக்கியப் ணி செய்வதில்லை ; செய்ய ஞ்சுகின்றனர். ஆனால் கால கம்-அரப்பா-மொகஞ்சதோ க்களைத் தோண்டி புதைந்து க்கும் பொருள்களையெல் ம் வெளியில் கொண்டு வந்து- ரிய - நாகரீகத்தையும் - திரா - நாகரீகத்தையும் பிரித்து- த்து - புடைத்து - சலித்துக் டிவிட்டது. அதைப் லவே இலக்கியம் எவ்வளவு மையானதாக இருப்பினும் ல் குழைத்து விடப்பட்ட

ஆரியம் எங்கு ஒளிந்து கொண்டிருந்தாலும் துருவித் துருவி - 'ஆரியம் இதோ' 'தமிழ் இதோ' என்று துணிந்து இலக்கியப் பணியாற் றும்-உண்மைப் புலவர்கள் சிலர் வளர்ந்து வருவதைக் காண் கிறோம்.

என்றாலும் சில இலக்கியங் களில் பாலோடு நஞ்சு கலக்கப் பட்டிருப்பதைப்போல் உயர் தனிச் செம்மொழி இலக்கியங் களில் ஆரியம் குழைத்துவிடப் பட்டிருப்பதால் - பாலையே ஊற்றி விட வேண்டிய வருந் தத் தக்க நிலையில் இருக் கிறோம்.

இலக்கியங்களில் இப்படி 'அறிவுப்பணி' தொடங்குவ தைக் கண்டவுடன் சிலர் வந் ததே விபத்து. ஆண்டு பல வாக அரும்பாடுபட்டு காத்து வந்தவைகளில் கை வைக்கின்ற னரே-என்று கவலைப்படுகின் றனர் சிலர். அந்த சிலரின் கவலைக்காக காலம் காத்துக் கொண்டிருக்கப் போவதில்லை. மாறாக-அவர்களின் எதிர்ப்பும் தடையும் - மேலும் புதுமை ஆராய்ச்சியாளர்களுக்கு-புதிய வலிவையும் - ஊக்கத்தையும் தந்து வருவதை நாம் காண் கிறோம். ஒன்றே குலம் என்றி ருந்த சமுதாயத்தில் ஆயிரம் உண்டிங்கு சாதி என்ற நிலை ஏற்பட்டுவிட்டது. சற்றேறக் குறைய 4000 ஆண்டுகளுக்கு முன் இங்கே மதம் இல்லை, சாதி இல்லை, சாத்திர சம்பிரதாயங் கள் இல்லை ; நால் வகை பேதம் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேறுபாடு கிடையாது.

எல்லாக் கேடுகளும் ஆரியர் நுழைவிற்குப் பிறகே ஏற்பட்ட வைகள் ; தமிழர்தம் இலக்கி யங்களிலெல்லாம் மெள்ள மெள்ள நுழைப்புவேலை செய் தனர். தன் இனம் வாழ-பாது காவலாய் இருந்த புராணங் களிடையே மக்களுக்கு தனி மதிப்பு ஏற்படுத்த முயன்றனர், இமயம் எல்லையாக இருந்த நமக்கு விந்தியம் எல்லையாகி விட்டதைப்போல. கலப்பு இலக்கியங்கள் தமிழர் சமுதா யத்தில் பெருகி விட்டன.

★

இந்தத் தகாத ஆரியக் கலப்பு தமிழரிடையேயும், தமிழ் இலக் கியங்களிலும் இருக்கக்கூடாது என்ற நோக்குடன் ; சிவவாக்கி யர் - ஔவையார் - திருவள்ளுவர் போன்ற சான்றோர்கள் தங்கள் பாக்களை ஆரியத்தை எதிர்க்கத் தான் பயன் படுத்தினர் என்று மேல் நாட்டு அறிஞரான (Charles E.Cover) சார்லஸ் ஈ.கவர் என்பவர் கூறியுள்ளார். பண் டைத்தமிழ்ப்பெரும் இலக்கியங் களில் சில கடல் கொண்டழிந் தன எனக் கூறுகின்றனர். எஞ்சிய சில நூற்களிலும் முழுத்தமிழ்ப் பண்பாட்டினைக் காண முடியவில்லை. சங்க நூற்கள் பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள் - ஐம்பெருங் காப்பியங்களான - சிலப்பதி காரம்-சிந்தாமணி-மணிமேகலை -வளையாபதி - குண்டலகேசியும் ஐஞ்சிறுகாப்பியங்களான சூளா மணி - உதயணன் காதை - நீல கேசியசோதர காவியம் - நாக குமார காவியம் போன்றவைக ளே தமிழர்க்குளமிச்சமிருந்த நூற்கள். இவற்றுள்ளும் பல

வற்றில் ஆரியம் தூவப் பட் டி-ருக்கிறது. தமிழ் அறிஞர்கள் இத்தகைய நூற்களில் கலக்கப் பட்டுள்ள ஆரியத்தை நீக்கி -புதியதிருந்திய பதிப்புகள் ஒவ் வொன்றிலும் புதுமைக் கருத் துக்கள் மிளிரும் வண்ணம் துணிவுடன் வெளியிட முன் வரவேண்டும்.

எல்லாம் போக தமிழர் பண்பாட்டினையே உயிரோட்ட மாகக் கொண்டு ஆக்கப்பட்ட திருக்குறள் தமிழகத்தின் தலை சிறந்த நூல். எச்சமயத்தின ரும் - எம்மதத்தினரும் ஒப்புக் கொள்ளக் கூடிய தனித்தமிழ் மறை. இந்த அரிய நூல் உல கத்தின் சிறந்த பதினொரு மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. இந்தக் குறளுக்கு பரிமேலழகர் தொட்டு பல புல வர்கள் உரை எழுதி உள்ளனர் என்றாலும் கூட சிலபல நீக்கப் படவேண்டிய - புகுத்தப்பட்ட இடைச் செருகல்களைக் களைந் தெரியாமல் - அப்படியே பூசி மெழுகி விட்டிருக்கின்றனர் ; வள்ளுவன் செய்த குறளையும்- காலத்தையும்-அவன் காலத்து வாழ்ந்த புலவர்களின் தமிழ்ப் பண்பையும்-வைத்துப்பார்க்கும் போது - அதே குறளின் சில பகுதிகளுடன் சில பகுதிகளை ஒப்பிட்டு நோக்கும்போது முரண்பட்ட கருத்துக்கள் எழு கின்றன. முப்பால் உணர்ந்து- அள்ளிச்சேர்த்த அழகு தமிழ் வார்த்தைகளால் ஒன்றேமுக் கால் அடியில் ஆழக்கருத்துக் களைப் பதித்து வைத்த வள்ளு வன்-முரண்பட்ட கருத்துக்களை ஒரே நூலில் கூறி இருப்பதற்கு

★ பகுத்தறிவிற்கேற்ப பாதை சமைப்போம் ! ★

நியாயமில்லை. நடுநிலையோடு நோக்கின் சில தலைப்புக்களும் - பாக்களும் - வேண்டுமென்றே புகுத்தி வைக்கப்பட்டுள்ளதைப் போல் காணப்படுகின்றன.

தமிழ் இலக்கியங்களைத் துணிவுடன் செப்பனிட முன் வரும்போது சில தமிழறிஞர்களுக்கு எரிச்சல் ஏற்படுகிறது. அத்துடன் யார் வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் ஆராய்ச்சி என்ற பெயரால் செய்து விட்டு - அழிவழக்கு என்று புலவர்கள் குற்றம் சாட்டும்பொழுது நான் புலவனல்ல-வெறும் ரசிகன் என்று கூறித் தப்பித்துக்கொள்ளும்-நபர்கள் எல்லாம் ஆராய்ச்சியில் இறங்கி-குட்டை குழப்பி-அரைத்த மாவையே - அரைத்துக் கொண்டிருப்பதில் பயனில்லை. புதிய பொருள்களுடன் - காலத்திற்கேற்ற முறையில்-அறிஞர்களில் நல்லோர்கள் ஒப்புக்கொள்ளும் தன்மையில் திருக்குறளுக்குமட்டுமல்ல- தமிழரின் தனித்தமிழ் இலக்கியங்கள் அனைத்திற்கும் திருந்திய -செப்பனிட்ட-ஆரியம் களையப்பட்ட-புதிய பதிப்புகள் வெளிவரவேண்டும். அந்த வெளியீடுகளனைவர்க்கும் பயன்படுகின்ற தன்மையாய் அமைய வேண்டும். இந்தச் சீரிய இலக்கியப் பணியினை-நல்லறிஞர்களிடையிருந்தும்-புலவர் குழாத்திடமிருந்தும் நாடு எதிர்பார்க்கிறது.

பகுத்தறிவு வளர விடாமல் மூட வழக்கங்களுக்கு அடிபணிந்து - பிறர் எடுத்துரைப்பின் ஏற்காமல் - எண்ணியும் பாராமல் - கண்டதே காட்சி - கொண்டதே கோலம் என்று பிடிவாதமாய்க் காலந்தள்ளும் புலவர்கள் சமுதாயத்தின் நோய்; நாம் கூறவில்லை. வள்ளுவர் அழகாகக் கூறி இருக்கிறார்.

'ஏவவும் செய்கலான் தான்-
தேறான் அவ்வுயிர்
போஓம் அளவும் ஓர் நோய்'

எனவே 'நடமாடும் நோய்களாக' எவரும் இருக்க விரும்பார் என்றே நாம் கருதுகிறோம்.

வில்வம்



பெண்

பெண் ஓர் இன்பவடிவு. அவளுடைய நீல மணிக்கண்கள் நட்சத்திரங்களைப் போல் ஜொலிக்கின்றன. அவள் அசைந்தால் நான் நடன மாடுகிறேன்; அவளுடைய ஒளிபொருந்திய முகத்தில் என் சிந்தனை அலைகள் எழுகின்றன. அவள் பருவத்தின் கனிந்த அமைதியில் துன்பத்தை எதிர்க்கும் உறுதி - காதல், முத்தம், கண்ணீர், புன்முறுவல் எல்லாம் கலந்து புரண்டு என்னை மயக்குகின்றன. அவள் நிகரற்ற அழகிற்கு முன் குழந்தை உள்ளம் பெறுகிறேன்; சொற்களைக் கடந்த எழிலோவியமாக வளர்கின்றது பெண்ணின் காந்த உடல்; ஆண்களைப் பற்றி இழுக்கும் அந்த ரோஜா மலர் கூட்டம் வாழ்க! பெண்ணின் பாசப் பிணைப்பால் நான் அமர நிலையடைகிறேன்; அழகின் ஆழத்தை- இன்பத்தின் உச்சியை எட்டிப்பிடித்தேன். கலையறிந்தேன் - கவிதை செய்தேன்; பெண்ணின் கண்ணழகைப் பருகப் பருக - கன்னத்தில் முத்தம் பொழியப் பொழிய பட்டு மேனியில் சாய்ந்து உறங்க உறங்க காதல் ஓங்கி மின்னலிடுகிறது!

— கீட்ஸ்

குழப்பம்!

நெஸ்டிராவ் என்ற ஆசிரியர் ஆஸ்திரேலியாவின் தலை நகரான வியன்னாவாசி. அவர் ஒரு நாள் மிகவும் வருத்தமாய் உட்கார்ந்து கொண்டிருந்தார்.

'ஏன் ஐயா இப்படி வருத்தமாய் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று ஒரு நண்பர் கேட்டார்.

"தன் மனைவியுடன் நான் வைத்துக் கொண்டிருக்கும் சம்மந்தத்தை விட்டொழிக்கா விட்டால் என்னைக் கொலை செய்து விடுவதாக பயமுறுத்தி ஒருவன் 'மொட்டைக் கடிதம் எழுதியிருக்கிறான்' என்றார் ஆசிரியர்.

"அந்தப் பாழாய் போன சம்மந்தத்தை விட்டு விட்டால் போகிறது. உயிரை விட — காதலா பெரிது? என்றார் நண்பர்.

"ஐயோ! அது சரிதான் - ஆனால் கடிதம் 'மொட்டைக் கடிதமாய் இருக்கிறதே! **எவன் மனைவி** என்றே எனக்குத் தெரியவில்லையே? என் செய்வேன்" என்று ஏங்கினார் ஆசிரியர் நெஸ்டிராவ்.

★ இலக்கியம் ★

பொதுவாழ்வில் பணியாற்றி இலக்கியத்துப்
பொன்வீட்டில் இளைப்பாறப் புகுந்த காலை
மதுக்கோப்பை கரத்தேந்திக் குடியன் காணும்
மாறாத கனவுலகம் காட்சியாகும்!

சதுராடும் மங்கையரின் பாதத் தோடு
சரியாகச் சேர்ந்தாடும் சிலம்பின் ஓசை
கதகதப்பை வாலிபரின் உளத்தி லேற்றிக்
கலக்குதல்போல் இலக்கியமும் கலக்கும் நெஞ்சை!

புத்தகங்கள் அறிவுக்கு உணவை யூட்டி
புதுப்புதிய காட்சிகளை மனதி லேற்றி
வித்தகனாய்ச் செய்யுமென இலக்கியத்து
வேலிக்குள் அடியெடுத்து வைத் திடாது

நத்துமனப் பசிதீரப் படித்துப் பார்த்து
நாலைந்து பேர்களுக்கு விளக்கிக் கூறின்
அத்தனையும் அறிவாகி மனதி லேறும்!
அறிவாளி எனும் பெயரை உலகம் நல்கும்!

வள்ளுவனின் குறள்மீது விழியை நாட்டி
வடித்த இரண்டடி எடுத்து மனத்துள் போட்டு
தெள்ளிதிறப் பொருள்கண்டு உளம் பூரித்து
சித்தரித்துப் பார்க்குங்கால் வளரும் எண்ணம்!

அள்ளுசுவை ஐம்பெரிய காப்பி யங்கள்
அடுக்கிவரும் உவமைநயச் சுவையால் என்றும்
கள்ளமனங் கூடநய நிலையைக் காணும்!
கவிதையிலே திருவிடத்துச் சோலை பாடும்!

புத்தறிவுப் பூமிக்கு விரைந்து செல்லப்
புதுப்பாதை காணுகின்ற இலக்கி யங்கள்
மெத்த உண்டு தமிழ் மொழியில்! மேலை நாட்டான்
வியக்கின்ற கலைத்தோட்டம் தமிழன் நாடு!

நித்தம் ஒரு மணி நேரம் பாக்குளத்தில்
நீந்திவரப் பெறும் 'வலிமை உடலம்' மேலும்
அத்தனையும் சீரணமாய் அறிவாயிற்றேல்
யாருண்டு நமக்கெதிரே! நாமே மன்னர்!

கண்ணதாசன்

ஒரே ஆசை!

உலக பிரசித்தி பெற்ற மோட்டார் உற்பத்தியாளராகிய என்றி போர்டுக்கு தன் மனைவியின் மேல் கொள்ளை ஆசை!

ஒரு நாள் ஒரு பத்திரிகை நிருபர் அவரிடம் சென்று 'உங்களுடைய அடுத்த பிறப்பில் நீங்கள் என்ன செய்வீர்கள் — மோட்டார் கார்களை விட்டு விட்டு ஆகாய விமானங்களில் கவனம் செலுத்துவீர்களா?" என்று கேட்டார்:

அதற்கு போர்டு அளித்த பதில்: "அடுத்த பிறப்பு இருக்கிறதோ- இல்லையோ - பிறப்பேனோ பிறக்க மாட்டேனோ. அதெல்லாம் எனக்குத் தெரியாது. ஆனால் ஒரே ஒரு ஆசை மட்டும் எனக்குண்டு. தவறி நான் அடுத்த பிறவி எடுப்பதாயின், இப்பொழுது எனக்கு வாய்த்துள்ள இதே பெண் - எனக்கு மனைவியாக வேண்டும்; இதுதான் என் ஒரே ஆசை" என்றார்.

அடுத்த இதழில் ஆரம்பமாகிறது

கண்ணதாசன் எழுதும்

'ஆயிரம் தீவு அங்கயற்கண்ணி'

(சரித்திரத் தொடர்கதை)

எண்ணம்

கண்ணதாசன்

" இயக்கு வியல் லோகாயத வாதம் "
மார்க்ஸியத் தத்துவ ஞானம்
" பௌதீக உலகம் "
" விஞ்ஞான சோஷலிசம் "

இப்படிச் சில 'சொல்லடுக்கு' களை வைத்துக் கொண்டு நண்பர் ஜீவானந்தம் அவர்கள், ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அந்தக் கட்டுரையின் தலைப்பு, "தி. மு. க. வுக்கு தத்துவம் உண்டா? என்று கேட்கிறது.

" திராவிட முன்னேற்றக் கழகம், என்றேனும், இந்த இயக்கு வியல் லோகாயத வாதத்தை, தனது தத்துவ ஞான அஸ்திவாரமாகக் கொண்ட துண்டா ? இல்லை; வேண்டாம். தி. மு. க. வுக்கு ஏதேனும் ஒரு தத்துவ ஞான அடிப் படையாவது உண்டா ? அதன் தலைமையால், தெளிவாக வரையறுக்கப் பட்ட தென்றோ, அதன் மாநில மாநாடுகளில் வகுக்கப் பெற்றது என்றோ, இன்று வரை தமிழ் மக்களின் முன் ஏதாவதொரு தத்துவ ஞானம் வைக்கப் பட்டதுண்டா ? இல்லவே இல்லை "

நண்பர் ஜீவா எழுதியுள்ள இந்த வரிகள், சுருக்கமாக, மத விவகாரத்தில் தி. மு. க. வுக்கு ஒரு தத்துவமும் இல்லை என்று கூறுகின்றன. மேலும், " ஒன்றே குலமும் ஒருவனேதேவனும்" என்பது திருமூலர் மந்தரம் என்ற உண்மையையும் 'சிரமப் பட்டு' கண்டு பிடித்திருக்கிறார் ஜீவா. இந்த கோஷம் வேறுவகையில் மதத்தை வளர்க்குமே அல்லாது மதத்தை அழிக்காது என்றும், மார்க்ஸ் கண்ணோட்டத்தோடு முடிவு கட்டுகிறார் ஜீவா. கம்யூனிஸ்ட் கட்சி அப்படி அல்லவாம்; அதுதான் தீவிர நாத்திகக் கட்சியாம் ! வாழ்க !

இது வரை, ஜீவா அவர்களின் கட்டுரைக் கருத்தை சுருக்கிக் கூறினேன். இதில் அவர் அண்ணாவை அறிவுச்சுடர்'என்று கிண்டல்செய்வதையும் சொல்லாமல்முடியவில்லை. அண்ணாவை 'அறிவுச் சுடர்' என்று கிண்டல் செய்கிற ஜீவா' அறிவுலகிற்குத் தான் அப்பாற் பட்டவன் என்பதை வலியுறுத்துகிறார். நல்லறிஞர் அறிவர், அண்ணா, அறிவுச் சுடரா இல்லையா என்று. ஜீவாவுக்கு அது புரியாது. அவர் அறிவு அவ்வளவுதான் ! பாவம் ! இது கிடக்கட்டும்.

" ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்கிற கோஷத்தை அண்ணாத்துரை சொல்லுவதன் மூலம், மதத்தை வேறு வகையில் வளர்க்கிறார் " என்கிறாரே, இதில் தான் அவரது அறியாமையும், அவர் எடுத்தாளுகிற அறியாமைக் கருத்துக்களும் பிரகாசிக்கின்றன ! குலம் ஒன்றான பிறகு, மதம் எப்படி வளருமோ நமக்குத் தெரியவில்லை. ஒரு தேவன் கொள்கை, அந்தத் தேவனை அடிப் படையாகக் கொண்ட ஒரு மதத்தை உண்டாக்கும் என்றுநினைப்பதே அறியாமை. மதங்களின் பிறப்பை அறிந்தவர்கள் இதை உணர முடியும். நாம் சொல்வது போன்ற 'மத எதிர்ப்பு முறை புதிய மதத்தை சிருஷ்டிக்கும் என்பதற்கு ஏங்கல்சின் கூற்றை ஆதாரமாகக் காட்டுகிறார். அவர் சொன்னதாலே, அது தான் முடிவு என்கிற மாதிரியும் தனது தத்துவ ஞானத்தைத் தமுக்கடிக்கிறார்.

"எலிக்குப் பகை பூனை " என்கிற முடிவைக் கூட நமது கம்யூனிஸ்ட் நண்பர்கள், லெனின் சொன்னதால் தான் ஏற்றுக் கொள்கிறார்கள். "எலிக்குப் பகை, நாய் அல்லது மாடு, என்று மார்க்சோ மற்றவர்களோ சொல்லியிருந்தால், இவர்களும் அதே கண்ணோட்டத்தோடு முடிவு காணுவார்கள். லெனின் அல்லது மார்க்ஸ் சொன்னது எப்படிப் பொய்யாயிருக்க முடியும் ! அவர்கள் அவதாரங்கள் அல்லவா ! அதே போல, ஏங்கல்ஸ் சொன்னதால் இந்த முடிவை அவர்கள் சொல்லுகிறார்கள் ! இல்லையென்றால் விவாதம் வேறு திசையில் திரும்பியிருக்கும். சுட்டுப் போட்டாலும் சொந்த புத்தி கிடையாதே, அவர்களுக்கு !

ஒரு தேவன் - உருவற்றிருப்பான். பால் பழம் சர்க்கரை, சீனியோடவல்பொரி, பாகுடன் பருப்பு நெய்' இராது ! அறிவார்த்த தெய்வமாக அது இருக்கும் என்கிற கொள்கை புதிய மதத்தை சிருட்டிக்காது. அறிவுள்ள - ஒன்றுபட்ட ஒரு சமுதாயத்தை சிருட்டிக்கும். ஏங்கல்ஸ் சொல்லி விட்டதாலேயே "எண்ணை என்பது தண்ணீர் " என்று முடிவு கட்டினால், இதைப் பிரதிபலிப்பவர்களது " மூளை என்பது களிமண் " என்று மற்றவர்கள் முடிவு கட்டவேண்டி வரும். ஏங்கல்ஸ் சொன்னது எழுத்துக்கெழுத்து, மார்க்ஸ் சொன்னது வார்த்தைக்கு வார்த்தை உலகம் முழுவதுக்கும் வேதமாக முடியாது! முன்பு எழுதியது போலவே மீண்டும் வலியுறுத்துகிறேன். லெனினோ, மார்க்சோ, ஏங்கல்சோ நமக்கு எழுத்துக்கெழுத்து பயன்பட மாட்டார்கள். அவர்கள் சொன்னதில் 'சில' நமக்கும் பயன் படும் - அவ்வளவு தான் ! ரஷ்யாவுக்கு தத்துப் பிள்ளைகளாகி அந்நாட்டுக் கொள்கையை அப்படியே தமுக்கடிக்கிற பஞ்ச புத்தி எப்பொழுது போகுமோ தெரியவில்லை !

ஏங்கல்ஸ், 'ஒரு தேவன் கொள்கை தவறு' என்று சொல்லியிருந்தால், தென்னாட்டு மத முறையை முன்வைத்துப் பார்க்கும் நாம்; " ஏங்கல்ஸின் வார்த்தை தென் நாட்டைப் பொறுத்தவரை அறியாமை மிக்கது " என்று முடிவு கட்டலாம். "ஏங்கல்ஸே சொன்னார் " என்கிற மூடபக்தி கம்யூனிஸ்ட் நண்பர்களுக்கு இருக்கலாம். காரணம், அந்த பக்தி செய்யவேண்டிய கடமை அவர்கட்கு இருக்கிறது. நமக்கு, நம் நாடு தான் முக்கியம். அதற்கேற்ப ஒரு கொள்கைதான் தேவை.

" முழு நாத்திகம்தான் கம்யூனிஸ்ட் லட்சியம் " என்கிற கம்யூனிஸ்ட் நண்பர்கள்தான், "ரஷ்யாவில் சர்ச் இருக்கிறது; மசூதி இருக்கிறது ;" என்று பிரசாரம் செய்கிறார்கள். எவ்வளவு முரண்பாடு பாருங்கள் ! சொல்லப் போனால் முழு நாத்திகத்துக்கு ரஷ்யாவே வந்து சேரமுடியவில்லை ! ஆனால், ஒரு தேவன் கொள்கை, முடிவில் முழு நாத்திகத்தைக் கொண்டுவந்துசேர்க்கும்! சகல மக்களாலும், அப்போது அது ஒப்புக்கொள்ளப்படும். இதைத் தான் தி.மு.கழகம் கூறுகிறது. தோழர் ஜீவா, அவர் கூற்றுப்படி, "மார்க்ஸீய வெளிச்சத்தில்" அலசுவதனால் இந்த நாட்டின் நிலையை மறந்து விட்டார். இன்றல்ல ; என்றும் ஒரு தேவன் கொள்கை, அறிவுயுகத்துக்கு ஆக்கம் தருமேயல்லாது, புது மதத்தை சிருட்டிக்காது !

இலக்கியத்தில் ....காதல்....

—: காரை. முத்துப்புலவர் :—

அவன் தனியாக நிற்கிறான்.

குதிக்கிறான்-துடிக்கிறான்.

"டேய் டேய் ! என்டா குதிக்கிறே ?"

" சுடுகிறது ! சுடுகிறது ! "

" நெருப்பைக்காணோமேடா ! "

" நெருப்பில்லாமல் சுடுகிறது ! "

" அடே ! தனியாக நிற்கிறாய் ! சுடுகிறதாவது ! "

" தனியாக நிற்பதால்தான் சுடுகிறது ! "

" விளங்கச் சொல்லப்பா ! "

" சொல்லுகிறேன். என் காதலி-எழில் உருவம்-மோகன வதனி ! அவள் ஒரு நெருப்பு ! "

" என்னப்பா இது ! பெண், நெருப்பா ! "

" ஆமாம் ! புதுமையான நெருப்பு ! அவளை நெருங்கினால் குளிர்கிறது ; நீங்கினால் சுடுகிறது "

" அப்படியென்றால்......? "

" அருகில் இருக்கும் போது, காதல் உணர்வில் கள்ளுண்ட மயக்கில், ஒரு குளிர்ச்சி, இதயத்தில் தானாக ஏற்படுகிறது. பிரிந்து விட்டாலோ, அந்த வேதனை என்னைச் சுட்டெரிக்கிறது ! அடடா ! இந்தத் தீயை அவள் எங்கிருந்து பெற்றாள் ! "

பெண்ணிடம் ஆண் கொள்ளும் காதல் உணர்ச்சிக்கு உருவகம் கொடுக்கிறான் வள்ளுவன். அதைப் புதுமையான நெருப்பாக்கி, பெண்ணிடம் சேர்த்து ஏதென்றும் கேட்கிறான் !

நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணெனும்
தீயாண்டுப்பெற்றாள் இவள் !

குறுகுங்கால் !-தொட்டபின் அல்லவாம் ! கிட்ட வந்தாலே போதுமாம் ! 'சில்'லென்று குளிர்கிறதாம் ! நெருப்புக்கு மாறுபட்ட உணர்ச்சி ! உன்னதமான கற்பனை !

அவனும் ஒரு ராஜா !

(10-ம் பக்கம் தொடர்ச்சி)

னர். மதுவின் சுவையை ரசித்துக் கொண்டே...ஆடுங்கள் அழகிகளே ஆசை தீர ஆடுங்கள். உங்கள் வளைவும்-நெளிவும்-இந்த மதுவை விட அதிக மயக்கம் தருகிறது."

" ரசவல்லிகளே ! ஆடுங்கள் ! ஆடுங்கள்! போதை பீரிட-காதல் கொப்பளிக்க-கட்டழகிகளே இன்று முழுதும் ஆடிக்கொண்டே இருங்கள்! நான் ரசித்துக்கொண்டே இருக்கிறேன் என்று மதுவெறியில் ஏதேதோ உளறிக்கொண்டிருக்கிறான் கொலுமண்டபம் என்பதையும் மறந்து விட்டு. அந்த அழகிகள் ஆடும் மயில்களைப்போல் ஆடிக் கொண்டிருக்கின்றனர்.

*சந்திரகுப்தனின் கவனம் ஆட்டத்தில் இல்லை ; அவனுக்கு ஒன்றுமே விளங்கவில்லை ! சாணக்கியனா ? சந்திரகுப்தனா ? யார் அரசன் ! என்றே அவனுக்குப் புரியவில்லை. சாணக்கியனின் ஆர்பாட்டங்களைப் பார்க்கப்பார்க்கசந்திரகுப்தனின் நெஞ்சம் கொதித்துக் கொண்டிருந்தது. கொதித்து என்ன பயன்; எதிர்த்துப் பேசமுடியுமா ? அதுவும் சாணக்கியனை ; சாணக்கியனின் 'சக்தியை' அவன் உணர்ந்தவன் ஆயிற்றே ; எனவே பெட்டிப்பாம்பானான். சந்திரகுப்தனின் முகத்தில் 'ராஜாக்களையும் தோன்றும்; அந்தோ பிணக்களை வழிந்து கொண்டிருந்தது. பாவம் **அவனும் ஒரு ராஜா !** அப்படித் தான் சரித்திரம் சொல்லுகிறது.*

திருப்பூரில்

முத்தமிழ் விழா !

21-11-54 ஞாயிற்றுக்கிழமை
சந்தைப்பேடடை ஆபீஸ் திடலில்

தலைவர் :
திரு. எ. சேனாபதி எம்.எல். எ.

இயல் :
நாவலர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.
கவிஞர் கண்ணதாசன்
கா. அப்பாத்துரை எம்.எ.,எல்.டி.
க. அறிவழகன் பீ.எ.ஆனர்ஸ்,
நாஞ்சில் கண்ணப்பா
தீ. தண்டபாணி பீ.ஓ.எல்.
அருண்மொழி பீ.ஓ.எல்.

இசை :
சாந்தகுமாரி குழுவினர்

நாடகம் :
' ஆண்டவன் எங்கே ? '
(சிந்தனைச்செல்வன் எழுதியது)

கவிஞர் வாணிதாசன்

"திரு. வாணிதாசர் ஒரு பெரும் உலகக் கவிஞர் ஆதல் வேண்டும் என்பது எனது வேட்கை.

திரு. வி. க,

"தமிழ் நாட்டிலே இக்காலத்தில் இருக்கும் கவிஞர்களில் உன்னத ஸ்தானம் வாணிதாசருக் குண்டு."

'ஈழகேசரி'யில் 'வேல்'

"பாரதியையும் பாரதிதாசனையும் போலவே வாணிதாசர் புதுப்புது உவமைகளைக் கையாளுவதில் வெற்றி பெற்றுள்ளார்."

'திருச்சி வானொலி'யில் என், சஞ்சீவி, எம். ஏ...

மனித சமுதாயத்திற்குப் புதிய புதிய கவிதைகளைப் படைத்துத் தொடர்ந்து நடந்தோரில் வெற்றி கரமாக முன்னேறியவர் தோழர் வாணிதாசன்...அவரது கவிதை களைப் படிக்கும்போது சில சமயங் களில் பாரதிதாசனுக்கும் முன் னாலே போகிறார் என்ற எண்ணந் தட்டும்...சொல்வளம், கற்பனை ஊற்று என்ற இரண்டும் வளமாகப் பெற்ற கவிஞர் தோழர் வாணிதாசன்... கவிஞர் கள் பிறக்கிறார்கள்' செய்யப் படுவதில்லை!' என்பது இவர் வரை யில் உண்மை...இவரது பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தால் 'நோபல்' பரிசு பெறக்கூடும்."

'தென்ற'லில் கண்ணதாசன்

"வாணிதாசர் ஓர் உண்மைக்கவி வெறும் பிரசாரத்தையும் வெறுப் பையும் வளர்க்கும் கவிதைகள் புற் றீசல்போல் கிளம்பி வரும் இக்கா லத்தில் உண்மையான கவிதைகள் பாடும் வாணிதாசர் போன்றாரை வரவேற்றுப் பாராட்டுவது தமிழர் கடனும்."

'சுதேசமித்திர'னில் 'வில்லன்'

"வாணிதாசனார், பாரதியார், பாரதிதாசன் ஆகிய இந்த இருவரி னும் விஞ்சிய வகையில் பாடி வரு கின்றார்...இவருடைய பாடல்களை உலகப் பெருங் கவிஞருள் ஒருவ ரான இரவீந்தரநாத தாகூரின் பாடல்களுக்குச் சமமாகக் கூறலாம். இவர் ஓர் இயற்கைக் கவிஞர்; கவி புனைவதற்காகவே பிறந்தவர். இவ ருடைய பாடல்கள் என்றும் அழி யாமல் நிலைத்து நிற்கும் தன்மை வாய்ந்தவை...தமிழ்நாட்டிற்குப் பாரதிதாசரும் வாணிதாசரும் இரு கண்மணிகள்."

பேராசிரியர் மயிலை. சிவ. முத்து

"...நறுமணம் கமழ்கிறது... காதுக்கும் கருத்துக்கும் விருந்தாக இருக்கின்றன...உருக்கமாக அமைந் துள்ளன. எளிய தமிழில் மணி யாக வார்த்தைகளைத் தேர்ந்தெடுத் திருக்கிறார் கவிஞர்."

—'தினமணி'

இவ்வாறு பலராலும் புகழப்படு கின்ற கவிஞர் வாணிதாசனை நேரில் பேட்டி கண்டு தமிழ் உலகிற்குத் தெளிவாகவிளக்கிக் காட்டவேண்டும் என்பது எனது நெடுநாளைய அவா. அதனை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு அவருடைய முகவரியைத் தேடிப் பெற்று, அவருக்கு எனது எண்ணத்தை விரிவாகத் தெரி வித்து ஒரு கடிதம் எழுதினேன். சுணக்கமின்றி அவரிடமிருந்து, 'தாராளமாக வரலாம்' என்ற பதில் தமது ஊருக்கு வருவதற் கான வழி விளக்கங்களுடன் கிடைத்தது. உடனடியாக நான் அவரைக் காணச் செல்வதற்கான ஆயத்தங்கள் செய்து மிகுந்த சிர மத்திற்கிடையே அரசாங்கத்திட மிருந்து 'அடையாளச் சீட்டுப் பெற்றுப் புறப்பட்டேன்.

" " "

கவிஞர் வாணிதாசரது வாழ்வி டம், பிரஞ்சிந்தியத் திட்டுப் பகுதி யில் புதுச்சேரியைச் சேர்ந்த பாகூர் தாலுகா (கொம்மூயன்)வில் உள்ள சேலியமேடு என்னும் குக்கிராம மாகும். புதுச்சேரி-கடலூர் வழி யில் இருக்கிறது. ஆனால், இவ் வூரை நேராகப் 'பஸ்'ஸில் சென்று அடைய முடியாது. காலுக்கும் வேலை உண்டு. இரண்டு கல் வரை நடந்தே தீரவேண்டும். புதுவையி லிருந்து கடலூர் செல்லும் 'பஸ் ஸில் ஏறினால் சுமார் 12-வது கல்லி லும், கடலூரிலிருந்து புதுவை செல்லும் பஸ்ஸில் ஏறினால் 5-வது கல்லிலும் உள்ள சிருமாம்பாக்கம் என்னும் ஊரில் இறங்கி மேற்கு நோக்கி 2 கல் தொலைவு நடக்க வேண்டும்.

நான் நேராகச் சென்னையிலி லிருந்து புதுவை சென்று, அங்கி ருந்து கடலூர் செல்லும் பஸ்ஸில் ஏறி, சிருமாம்பாக்கத்தில் இறங்கி னேன். அங்கு எனக்கு வழித் துணைவர் ஒருவர் கிடைத்தார். அவ ருடன் பேசிக்கொண்டே சேலியமேடு நோக்கி நடந்தேன். ஊர் மிக மிக அண்மையில் வந்ததும் சிறிய சிறிய குடிசைகள் தென்பட்டன. அதனைச் சுட்டிக் காட்டி, "இதுதான் எங்கள் ஊர்!" என்றார் 'வழித்துணைவர்'. ஊரினுள் நுழைந்தோம். ஊரை அடைந்து பத்துப் பதினைந்து அடி தூரம் நடந்து சென்றவுடன், ஒரு சிறிய குடிசை வீட்டைச் சுட்டிக் காட்டி, "இதுதான் 'வாத்தியார்' வீடு. நான் வருகிறேன்" என்று விடை பெற்றார் வழித் துணைவர். நானும் எனது வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக்கொண்டு வீட்டை நோக்கினேன்.

" " "

'புரட்சி அகம்' என்று பொறித்த அட்டை, குடிசையின் முன்னர்த் தொங்கிக்கொண் டிருந்தது. உள்ளே நுழைந்தேன். கறுப்பு நாய் மதிற் சுவர்மேல் போர் வீர னைப் போல் நடந்து 'பாரா' கொடுத் துக்கொண்டிருந்தது. கோழிகள் தரையைக் கிளறிக்கொண்டிருந் தன. தூணுக்கொரு கன்று கட் டப்பட்டிருந்தது. தட்டு முட்டு சாமான்கள், ஏர்க்கால்கள், கலப் பைகள், மண்வெட்டி, களைக்கொத்தி கடப்பாறை முதலான கருவிகள் ஆகிய இவையெல்லாம் ஒரு பக்கம் கிடந்தன. பிண்ணாக்கு மூட்டைகளும் மேல்நாட்டு இரசாயன உரங்களும் பிறவும் ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கி வைக்கப்பட் டிருந்தன. பிண்ணாக்கை மோப் பம் பிடித்துக்கொண் டிருந்தது ஒரு வெள்ளை நாய். நீர் இறைக் கும் 'பம்பு செட்டுக் குரிய எண் ணெய்ப் பெரும் 'பீப்பாக்களும். இரும்புக் குழாய்களும் ஒரு புறம் கிடந்தன. இத்தனைக்கும் மத்தி யில் ஒரு தூணில் தூசு படிந்தும், ஒட்டடை அடைந்தும் காற்றில் ஊச லாடிக்கொண்டிருந்தது ஒரு மாதத் தேதிப்படம். அதிலேதான் எத் தனை தலைவர்கள்! எழுதி முடி யுமா? ஈச்சம்பாயிலும், சாணம் கொண்டு மெழுகிய மண் தரையி லும் தலையணையிலும், தலையணை இன்றியுமாக இரண்டு மூன்று குழந்தைகள். 'இடிந்து பாழாய்ப் போன கோயில்களில் கிடக்கின்ற சிலைகளைப்போலப் படுத்துத் தூங் கின. ஒன்று, விரல் சுவைத்தவாறே தூங்கியது. விரலுடன் பழந்துணி யைப் பிணைத்துச் சுவைத்துக் கிடந் தது மற்றொன்று. இத்தனை குழந் தைகளுக்கும் போர்வையாக ஈக்கள் இருந்தன! இவற்றின் நடுவில் மேசையும் நாற்காலியும் தூசு படிந்து கிடந்தன. மேசையை ஒட் டிய சுவரில் புரட்சிக் கவிஞர் பாரதி தாசன் சிரித்துக்கொண் டிருந்தார்! ஆமாம்; நான் இங்கு தவிர, வேறெங்கும் 'சிரித்த பாரதிதாசர்' படத்தைப் பார்த்ததே இல்லை! ஆகா, என்ன பெயர்ப் பொருத் தம்! மொத்தத்தில் அந்த வீடு ஒரு புரட்சி அகமேதான்!

" " "

அங்குக் கிடந்த நாற்காலியில் நான் அமர்ந்தேன். ஒரு பெண் நல்ல நீர்மோர் கொண்டுவந்து பருகக் கொடுத்துவிட்டு, "நயினா தூங்குறாங்க எழுப்பட்டுமா?" என்று கேட்டாள். அதற்குள்—

படிந்த முடி, பரந்த நெற்றி, கண்ணாடி பெற்ற கண்கள், நீண்ட மூக்கு, நீள்கழுத்து, இறுகிய உடல், இளமைத் தோற்றம், நல்ல உயரம், இளகிய நெஞ்சு, தைரிய உள்ளம் தலைக்கேறிய எளிய இனிய தனித் தமிழ்ப் போதை—

இத்தனை சிறப்புக்களையும் கொண்ட அந்த 'நயினாவே வந்து, என்னை வரவேற்றார். அவர்தான் வாணிதாசன் என்று சொல்லவும் வேண்டுமோ?

" " "

கவிஞர் வாணிதாசனுடைய இயற் பெயர் (அ) ரங்கசாமி, எத்திராசன் எனச் செல்லமாக அழைப்பது துண் டாம்! 1915-ம் ஆண்டு சூலைத் திங்கள் 22-ஆம் நாள், புதுவையி லிருந்து விழுப்புரம் செல்லும் வழி யில் 5-வது மைலில்உள்ள வில்லிய னூர் என்னும் ஊரில், பிரஞ்சிந் திய அரசாங்கத்தில் கர்ணம் வேலை பார்த்துவந்த திருக்காடு நாயுடு - துளசி அம்மையார் ஆகிய இருவ ரின் தலைமகனாகப் பிறந்தார். தாயார் தன்அருமந்தமகனை ஐந்தா வது வயதில் விட்டு,விட்டு 'வைகுந்த பதவி' அடைந்துவிட்டாராம்! யாதவ குலத்தார் - இடையர் - 'இயற்கை எய்தினார்' என்பதனை 'வைகுந்த பதவி அடைந்தார்' என்று சொல்லு வதும் எழுதுவதும் வழக்கமாம்! தாயார் இறந்ததும் பாட்டி அம் மாயி அம்மையாரே சிறுவன் அரங்கசாமியைக் கண்ணும் கருத்து மாக வளர்த்துவந்தாராம்! யாரை மறந்தாலும் என்பாட்டி அம்மா யியை மட்டும் மறக்க முடியாது என்கிறார் கவிஞர். காரணம்: அந்த அம்மையார் தமது அந்திய காலம்வரை குழந்தை எத்திராசனை வளர்த்தது மட்டுமன்று; அவன் எத்தனை நாள்வரை வெளியில் சென்றிருந்தாலும் அன்ன ஆகாரம் இன்றி இருந்து, அவன் வந்ததும் அவனுக்குச் சோறு போட்டு அவன் திருப்தியாகச் சாப்பிட்டான பிறகே தான் சாப்பிடும் உயர்ந்த வழக்கம் கொண்டிருந்ததுதானும்! ஆனால், கவிஞர் இரண்டொரு முறை தவிர, பாட்டியை இப்படிப் பலமுறை பட் டினி போட்டதில்லையாம்!

கவிஞர் தொடக்க முதல் இறுதி வரை புதுவையிலேயே கல்வி கற்றி ருக்கிறார். அவர், பிரஞ்சிந்தியத் தமிழ் வித்துவான் (B. i); ஆசிரியர் பயிற்சி ஆகியவற்றில் தேர்ச்சி பெற் றுள்ளார். இவற்றைப் படிக்கும் வரைக்கும் கவியரசர் பாரதிதாசனே இவருக்கு ஆசிரியராய் இருந்தார் என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. மேலும், பிரஞ்சு மொழியில் நமது பி. ஏ.-க்குச் சமமான பி. இ. வரை யிலும் படித்துள்ளார். இம்மூன்று தேர்வையும் இவர் 1935-ஆம் ஆண் டுக்குள் தமது இருபதாவது வயதில் முடித்துவிட்டார்.

கவிஞருக்கு ஐந்து பெண்களும், இரண்டு ஆண்களும் ஆக எழு மக் கள் உள்ளனர். அவர்களின் பெயர்கள் மாதிரி, ஐயை, நக்கீரன், எழிலி, முல்லை, இளவெயினி, நலங்கிள்ளி என்பனவாகும். கவி ஞர், பெயரிலும் புரட்சி செய்துள் ளார். இப்பெயர்களில் அவரு டைய தமிழ் வெறி, சங்க இலக்கி யங்களின் ஆழ்ந்த பற்று ஆகிய வற்றைக் காணலாம்.

1937-ம் ஆண்டில் தி. அரங்க சாமி இருபத்தேழு ரூபா சம்ப ளத்தில் பிரஞ்சிந்திய அரசாங்கப் பள்ளிக்கூட வாத்தியார் தி. ரங்க சாமி ஆனார். அன்றிலிருந்து இன்றுவரை பதினெட்டு ஆண்டுகள் அவர் ஆசிரியராகவே இருந்து வரு கிறார். ஆனால், அவர் பணியாற் றிய இடங்கள் ஒன்றிரண்டல்ல; பல. புதுவைப் பகுதியைச் சேர்ந்த காட்டேரிக்குப்பம், தொண்டைமா னத்தம், புதுவை, காரைக்கால் பகுதியைச் சேர்ந்த குரும்பகரம், திருமலைராயன் பட்டினம் ஆகிய இடங்களில் உள்ள தொடக்கப் பள்ளிகள், மீண்டும் புதுவையைச் சேர்ந்த பாகூரிலுள்ள நடுநிலைப் பள்ளியில் இருமுறையும் இருந்து கல்வி தமிழ்ப் பணி ஆற்றியிருக்கி றார். இந்தச் சமயத்தில்தான் அவ

நா. அறிவழகன்

தம் சொந்த முயற்சியால் படித் 1948-ஆம் ஆண்டு சென்னைப் பல் கலைக்கழக வித்துவான் பட்ட பெற்றார். பிறகு அவரைப் பு வைக் கல்வே கல்லூரி தனது தமிழ்ப் பேராசிரியராக ஏற்று கொண்டது. அங்கிருந்த கால

தில் அவர் செய்த தமிழ்த்தொண்டை அவ்வளவு எளிதாக ஏட்டில் எழுதிச் சொல்லிவிட முடியாது! அங்கு மூன்றாண்டு காலம் தமிழ்ப் பணி ஆற்றிய அவர், தற்போது இறுமாம்பாக்கம் என்னும் ஊரில் உள்ள தொடக்கப் பள்ளியில் துணைத் தலைமையாசிரியராகப் பணியாற்றி வருகிறார். இருபத்தேழரை ரூபா சம்பளத்தில் பிரஞ்சிந்திய அரசாங்கப் பள்ளி ஆசிரியராகச் சேர்ந்த அவர், பதினெட்டு ஆண்டுக் காலத்தில் இருநூற்றைம்பதுரூபாசம்பளம் வாங்குவது கண்டு, இங்குள்ளோர் வியப்படைவதில் வியப்பில்லை!

" " "

கவிஞருக்கு இளமைக் காலம் தொட்டே இசைப் பாடல்களில் விருப்பம் மிகுதியாம். இசைப்பாடல்களைக் கேட்பதும், அதைத் திருப்பித் தமக்கே உரிய இசையில் பாடி மகிழ்வதுமாக இருந்ததோடு, அவற்றைப்போல எழுதவும் தொடங்கினாராம். இம்முயற்சிதான் இறுதியில் அவரை இத்தனை புகழுக்கும் உரிய கவிஞர் ஆக்கிற்று! நான்கூட அவருக்கு இசை தெரியும் என்று கருதியதில்லை. ஆயினும், தெரியும் என்றவுடன் சோதிப்பதற்காகச் சமீபத்திய 'காதல்' பத்திரிகையில் வெளிவந்த 'பக்கத்தில் நீ இல்லை என்றாலே...?' என்று தொடங்கும் அவருடைய பாடலையே பாடச்சொன்னேன். அவர் பாடல் முழுவதையும் கும்மி மெட்டில் பாடிக் காட்டினார். அது மிக மிக நன்றாயிருந்தது. இவர் ஓர் இசைவாணர்தான் என்ற முடிவுக்கு வந்தேன்.

இவருடைய கவிதையை இவர் முதல் முதல் அச்சில் கண்டது, துரையிலிருந்து திரு. கோ. த. ண்முக சுந்தரத்தை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த தமிழன் பத்திரிகையில்தானாம்! தமது முதல் விதை வெளிவந்தது, அநேகமாக 938-ஆம் ஆண்டாக இருக்கலாம் என்கிறார் கவிஞர். இவரது முதல் பாடலைப் பார்த்ததுமே 'தமிழன்' ஆசிரியர் கோ. த. ச. உடனடியாகப் புகைப்படம் கேட்டுப் பெற்று, பாடலுடன் படத்தை வெளியிட்டு தன்கீழ் அடியிற் கண்டவாறு குறிப்பிட்டிருந்தாராம்:

'பிற்காலத்தில் சிறந்த கவிஞராகும் தகுதி இவருக்கு உண்டு என்பது, இந்தப் பாடலிலிருந்து தெரிகிறது. இவரது பாடல்கள் ஏதோ ஓர் உயர்ந்த இலட்சியத்தை பிடிப்பிடிக்கின்றன.'

இதைப் பார்த்ததும் கவிஞர், அவ்வளவு தகுதி நமக்குண்டா? 'வெறும் புகழ்ச்சி!' என்று என்று ஐயப்பட்ட துண்டாம்!

வாணிதாசன் இரண்டுமுறை நேரிலும், ஒருமுறை எழுத்து வழியாக ஆக மூன்று முறை திருச்சி வானொலி நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுள்ளார். தாமே எழுதிய நாட்டுப் பாடல்கள்' சிலவற்றைத் திருச்சி வானொலி நிலையத்தார் பரப்பினர் முதல் முறை. இரண்டாம் முறை கவிஞரே தமது கவிதைகள் சிலவற்றைக் 'கவிச் சொல் கேளீர்' என்ற தலைப்பில் படித்துக் காட்டினார். மூன்றாவது தான் மிக முக்கியமானது. கவிஞரை ஓரளவு அனைவரிடமும் தெரியப்படுத்தியது என்று கூறினாலும்கூட மிகுதிப் படுத்திக் கூறியதாகாது. சர். ஆர். கே. சண்முகம் தலைமையில் நடந்த கவியரங்கத்தைத்தான் குறிப்பிடுகிறேன். அன்று கலந்துகொண்ட எல்லாக் கவிஞர்களிலும் இவரே உச்சநிலையில்இருந்தார். அறிஞர் ஆர். கே. எஸ். அவர்களே ரசித்து ரசித்துப் பல முறை பல வரிகளைத் திருப்பித் திருப்பிப் பாடச் செய்து விட்டாரென்றால், பிறகு கேட்பானேன்? அன்று கவிஞர், 'வாழ்க இளம் பரிதி' என்ற தலைப்பில் தமது கவிதையைப் பாடிக் காட்டினார்.

கோவையில் நடந்த 'முத்தமிழ் மாநாட்டுக் கவியரங்கப் போட்டியிலும் கவிஞர் கலந்துகொண்டார் என்றும், அதில் அவரது 'அழகின் சிரிப்பு' என்ற தலைப்பில் அமைந்த கவிதைகள் போட்டி யிட்டன என்றும், அதன் தேர்வாளராக நாவலர் பாரதியார், பாரதிதாசன், நெடுஞ்செழியன், அப்பாதுரை ஆகியோர் இருந்தனர் என்றும், அதில் அவருக்கு இரண்டாம் பரிசு கிடைத்ததென்றும், கவிஞரது உயிர் நண்பரொருவர் சொல்ல அறிந்தேன்.

கவிஞர் வாணிதாசர்க்கு இப்பொழுது நாற்பதாம் வயது நடந்து கொண்டிருக்கிறது. பார்ப்பவர்களும் மதிப்பவர்களும் 40-வது வயது என்றால், நம்பவே மாட்டார்கள். ஆனால், உண்மை என்னவோ, நாற்பதுதான்!

கவிஞர் முதல் முதல் நூல் வடிவில் தந்தது, 'தமிழச்சி' என்னும் சிறு காப்பியமாகும். இரண்டாவதாக, 'கொடிமுல்லை' என்ற காப்பியம் வெளிவந்தது. மூன்றாவதாக, வேலூர் திராவிடன் பதிப்பகத்தார், 'தொடுவானம்' என்ற இசைப் பாடல்கள் நிறைந்த நூலை வெளிக் கொணர்ந்தார்கள். கடைசியாக, அண்மையில் வெளிவந்து அவர் புகழை வளர்த்தது, 'எழிலோவியம்' என்னும் உலகோர் பெருமைப் படக் கூடிய அரிய இலக்கிய நூல் ஆகும்.

நான் அவரைப் பல கேள்விகள் கேட்டேன் :

நான்: நீங்கள் பாடங்கேட்ட ஆசிரியர்களுள் குறிப்பிடத் தகுந்தோர் யார்?

அவர்: பாரதிதாசன். அன்றும் இன்றும் என்றும் என் ஆசான் அவரேதான்!

நான்: உங்களுக்குப்பிடித்தமான தொழில் எது?

அவர்: சுதந்தரமும் சுயேச்சையும் நிறைந்த விவசாயம்.

நான்: உங்களுக்குப் பிடித்த கவிஞர்கள் யாவர்?

அவர்: தலைசிறந்தவர் பாரதிதாசன்; மற்றவர்கள்: தேசிக விநாயகம் பிள்ளை (கவிஞர் கூறும்பொழுது 'அமரர்' ஆகவில்லை!) முடியரசன், பா. முத்து.

நான்: உங்களுக்குப் பிடித்த எழுத்தாளர்கள் யாவர்?

அவர்: காலஞ் சென்றவர்களில் புதுமைப் பித்தனும் வ.ராவும். இருப்பவர்களில் சி. என். அண்ணாதுரை, அரு. இராமநாதன், அகிலன், டி. கே. சீனிவாசன் ஆகியோர்.

நான்: தமிழ்த் திரைப்பட வசன கர்த்தாக்கள், கவிஞர்களில் யாரை விரும்புகிறீர்கள்?

அவர்: வசனத்தில் அண்ணாதுரை, இளங்கோவன், கருணாநிதி ஆகியோரையும், பாட்டில் உடுமலை நாராயண கவி, கவிஞர் கண்ணதாசன், கம்பதாசன் ஆகியோரையும் விரும்புகிறேன்.

நான்: பிடித்த புலவர்கள்...?

அவர்: பலர்; சிலரைக் குறிப்பிடுகிறேன் : நாவலர் பாரதியார், டாக்டர் ஏ. சி. செட்டியார், ரா. பி. சேதுப்பிள்ளை, டாக்டர் மு. வ.; தேவநேயர், அப்பாதுரை, அரசன் கண்ணனார், ஔவை. சு. துரை, மயிலை சிவ. முத்து, நன்னன், தில்லை அழகுவேன், முருகேசன், தணிகை உலகநாதன், கோ. வில்வபதி, புதுவை குமாரசாமி செட்டியார்.

நான்: இறந்தோரில் யாரின் பொருட்டேனும்மிகத்துயரம் அடைந்திருக்கிறீர்களா?

அவர்: பலரின் பொருட்டு அடைந்திருக்கிறேன். அவர்களில் முக்கியமாகக் குறிப்பிடத் தகுந்தவர் கரந்தைக் கவியரசு ஆர். வேங்கடாசலம் பிள்ளை. மற்றவர்கள் மறைமலையடிகளும், திரு. வி. க. வும், 'காசு'-வும் ஆவார்கள்.

நான்: நீங்கள் விரும்பும் இன்பப் பொழுதுபோக்குகள் யாவை?

அவர்: வயல் வெளி சுற்றுவது, சிறுவர்களோடு விளையாடுவது, கவிதை எழுதுவது, படித்துக் கொண்டிருப்பது - ஆகியவைதாம் எனது இன்பப் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகள்.

நான்: உங்களுக்கு வேண்டாதவர்கள்...?

அவர்: **தமிழ்ப் பகைவர்கள்!**

நான்: அடிக்கடி நீங்கள் கூட்டங்களில் கலந்து கொள்வதில்லையே, ஏன்?

அவர்: இலக்கிய, சமுதாய, கலைக் கூட்டங்களில் சில பல முறை நான் கலந்து கொண்டிருக்கிறேன். ஆனால், மிகுதியாகக் கலந்துகொள்வதில்லை என்பது உண்மைதான்! அதற்குக் காரணம் குடும்பத் தொல்லை, சூழ்நிலைகளே ஆகும்.

நான்: நாடு, குடும்பம் - எது பெரிது?

அவர்: இரண்டையும் நான் ஒரே நோக்கிலேயே பார்க்கிறேன்; கருதுகிறேன். ஆயினும், நாட்டைவிட குடும்பத்தையே முதலாவதாகக் கவனிக்க வேண்டியதாகவும் உணர்கிறேன். எனது பணியில் தற்சமயம் இரண்டாம் இடத்தையே நாடு பெறுகிறது. நான் இப்படிச் சொல்வதற்கும் ஏது உண்டு. இது வரையிலும் கவிஞர்கள் தங்கள் குடும்பத்தை அறவே கவனிக்காது நாட்டையே கவனித்து வந்தார்கள். ஆனாலும், அவர்கள் குடும்பம் பட்ட பாடு சொல்லுந்தரமல்ல! அதிலும், நமது நன்மான இயக்கத்தைச் சேர்ந்தவர். குடும்பத்தை தன்டானமாக வாழவைக்க வேண்டாமா? தான் திருந்தி, வீடு ஊர் ஆகியவைகளைத் திருத்தி, பிறகன்றோ நாட்டைத் திருத்தப் புறப்பட வேண்டும்? இன்னும் சொல்லப் போனால், நான் இரண்டையுமே கருதி நடக்கிறேன் என்று கூடச் சொல்லலாம். நான் குடும்பத்தைக் கவனிக்கிறேன். அதே நேரத்தில் எனது எழுத்துக்கள் நாட்டுப் பணி செய்கின்றன. இரண்டிலும் காதல்தான்! ஆனால், குடும்பம் பெரிது என்பதில் என் ஈடுபாடு சற்றுக் கூடுதல். அவ்வளவுதான்!

நான்: கவிதை எப்படி இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?

அவர்: கவிதை பொருள் செறிவுள்ள சொற்களால் அமைந்ததாயும், கருத்துக்கள் பொலிந்ததாயும், இலக்கிய இலக்கணம், மரபு பண்பாடு ஆகிய கட்டுகள் அமையப் பெற்றதாயும், நல்ல எளிய இனிய தனித்தமிழ் வரம்பை மீறாததாயும் புதிய நெறியில் சிந்தித்துச் சூழ்நிலைக்கேற்ப புகழையோ இகழையோ கருதாமல் பாடப்பட்டதாயும், வெறும் வார்த்தைக் கட்டம் இல்லாததாயும், இன்பமும் தெளிவும் இலங்குவதாயும் இருக்க வேண்டும். இவற்றுக்கெல்லாம் மேலாகப் படிப்போருக்குச் சுவையும் பயனும் தரத் தக்கதாயும் இருக்க வேண்டும்.

நான்: கவிதைக்கு இலக்கணம் அவசியந்தானா?

அவர்: மிகமிக அவசியமானதே. இசை சந்தவண்ணப் பாடல் இலக்கண அமைதியுடன் தாளக் கட்டுத் தவறாததாய் இருக்கவேண்டும்.

நான்: கவிதை வளர வில்லையே, காரணம் என்ன?

அவர்: பிற்போக்கு, பிறமொழித் தொடர்பு இல்லாததோடு புதிய கருத்தைச் சிந்தித்துப் பாடாமை, வெளியிட்டு ஆதரித்துப் புரப்போர் இன்மை ஆகியவையே கவிதை வளராமைக்குக் காரணங்களாகும்.

நான்: உரை நடைக்கு இருக்கும் மதிப்பு கவிதைக்கு இல்லையே, ஏன்?

அவர்: இன்றைய நிலைக்கு இது சரியே! மக்கள் கல்வி அறிவு குறைவுடையவர்களாக இருக்கிறார்கள். 'கவிதையா? புரியாது!' என்ற மனோபாவம் மக்களிடம் குடி கொண்டிருக்கிறது. இந்நிலை மாறி அவர்கள் கல்வி அறிவு பெருகுமானால், கவிதையைப் படிப்பார்கள்; சுவைப்பார்கள். கவிதைக்கு மதிப்பும் வளர்ச்சியும் ஏற்படும். உரை நடையைப் போல கவிதை நடை இருந்தால் எளிதாக விரும்புவார்கள். அதாவது வெள்ளைப் போர்வையில் சுவையுடையதாக இருக்கவேண்டும். மேல் நாட்டார் உரைநடை கவிதை நடைபோல இருப்பதே இதற்கோர் எடுத்துக் காட்டாகும்.

நான்: 'வசன கவிதை' என்று சிலர் எழுதி வருகிறார்களே, இம்முறை தமிழுக்கு வேண்டியதுதானா?

அவர்: **வேண்டியதே இல்லை!**

யார் அனுப்பியது?

திருமணமான இளந்தம்பதிகள் புது வீட்டில் குடிபோனார்கள். ஒரு நாள் ஒரு புதிய நாடகத்திற்கான நுழைவுச் சீட்டு இரண்டு தபாலில் வந்தது. அனுப்பியவர் அதில் பெயர் குறிப்பிட வில்லை; தம்பதிகளுக்கோ யார் அனுப்பியது என்றே புரிய வில்லை!

தம்பதிகள் இரவுநாடகம்பார்த்துவிட்டு வீடு திரும்பினார்கள். வீட்டில் திருமணத்தில் கிடைத்த விலை உயர்ந்த பரிசுகள் எல்லாம் களவாடப்பட்டிருந்ததைக் கண்டு திடுக்கிட்டுப் போனார்கள். 'இப்பொழுது தெரிந்துகொண் டிருப்பீர்கள்' என்று எழுதப் பட்ட ஒரு காகிதம் தரையில் கிடந்தது!

—டைஜஸ்ட்

நான்: வளரும் தமிழ் எப்படி இருந்தால் நல்லது ?

அவர்: சங்க கால எளிய இனிய தனித்தமிழை எட்டிப் பிடித்தால் நல்லது.

நான்: மேடைப் பேச்சு தேவை தானா ?

அவர்: தேவையானதுதான். படித்தோரைத் திருத்த மட்டுமே எழுத்து பயன்படும். பேச்சோ ஒரே காலத்தில் இருவரையும் - ஏன் ?- அனைவரையும் திருத்தப் பயன்படும். காரியங்களை நிறைய சாதித்துக் கொள்ளலாம். ஆகவே, மேடைப் பேச்சு தேவைதான் !

நான்: எழுத்து, பேச்சு-இதில் நீங்கள் எதை விரும்புகிறீர்கள் ?

அவர்: இரண்டையும்.

நான்: நீங்கள் எழுதும் நேரம் எது ?

அவர்: அமைதியான இரவு 12 மணிக்கு மேல்.

நான்: நீங்கள் விரும்பிப் படிக் கும் பத்திரிகைகள் எவை?

அவர்: எல்லாப் பத்திரிகைகளை யுமே விரும்பிப் படிக்கிறேன். 'நம் நாடு', 'தமிழ் நாடு', 'விடுதலை', 'திராவிட நாடு', 'தென்றல்', 'காதல்', 'கலைக்கதிர்', சிங்கப்பூர் 'தமிழ் முரசு', யாழ்ப்பாணத்து 'ஈழகேசரி', பிரஞ்சுப் பத்திரிகைகள் ஆகியவைகளை மிகுதியாக விரும்பு கிறேன். இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு துறையில் சிறந்து விளங்குவதே அதற்குக் காரண மாகும்.

நான்: தமிழ் மொழி வளர்ச்சி குறித்து என்ன செய்ய வேண்டும் ?

அவர்: படிக்குமிடம் அனைத்தி லும் எல்லாப் பாடங்களையும் கூடிய விரைவில் தமிழிலேயே சொல்லித் தர ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

நான்: நீங்கள் விரும்பாதவை ?

அவர்: மரக்கறி உணவு, பொய் பேசுதல் !

கவிஞருடன் பேசிக்கொண்டிருந் ததிலிருந்து அவரது எண்ணங்கள் பலவற்றை என்னல் ஊகித்தறிய முடிந்தது.

அவர் இப்பொழுது பால்சாக்கின் 'கருமியின் மகள்' என்ற புதினம், விக்டர் ஹியூகோவின் 'காதல் எங் கே'? என்றநாடகம்,பிரஞ்சு அறிஞர் எழுதிய 'கற்பிக்கும் முறை' ஆகிய வைகளை மொழி பெயர்த்தும், 'புரட் சிப்பெண்', 'நிலாமுகம்', 'பிறைமதி' என்ற மூன்று சிறு காப்பியங்களை எழுதியும், 'பிரஞ்சு-தமிழ் அகராதி' யைத் தயாரித்தும் வருகிருர்.

'மாப்பசான் கதைகள்' என இவ ரால் மொழிபெயர்க்கப்பட்ட பல சிறந்த சிறு கதைகள் அடங்கிய தொகுப்புநூலும், 'கலித்தொகை', 'அகநானூறு'களை யொத்த 'காதற் பாட்டுகள்' என்ற கவிதை நூலும் இப்பொழுது அச்சாகிக் கொண் டிருக்கின்றன. இவை யனைத் தும் வெளிவந்து தமிழ் உலகில் உலாப்போந்தால், தமிழ் இன்னும் வளரும்; அதன் வளர்ச்சியால் இவர் புகழ் பெருகும் என்பதில் இரண்டிலலை !

★

'கவிஞர் வாணிதாசன் கால வேகத்தில் அழிந்து விடக் கூடிய கட்சிக்களுக்கு இடமளித்து இரை யாகிருர்' என்கிருர்கள் 'நல்ல' தமிழர்கள். 'வெறும் பூசலையும், வெறுப்பையும், தீய பிரசாரத்தை யும் வளர்த்து வரும் கவிஞர்கள் மலிந்த இந்தக் காலத்தில் இவர் போன்ற இயற்கைப் பாடல்கள் பாடு வாரைப் போற்றுவது தமிழர் கட னும்' என்கிருர்கள் சுத்தத் தமிழர் கள். இப்படி இரு சாராரும் கவி ஞருக்கு உயரிய கொள்கைகள் உண்டு. அவை அவர் மனத்தில் உரம் பெற்றுள்ளன. அவற்றை அடிப்படையாக வைத்தே அவர் கவி புனைகிருர். ஆனல், அது வெட்ட வெளிச்சமாக இல்லை ; 'நாசூக்'காக இருக்கிறது !

கவிஞர் வாணிதாசன் பொதுமக் கள் மத்தியில் நடமாடவேண்டும் ; திரைப்பட வசன கவித் துறைகளில் சற்று ஈடுபட வேண்டும் ; நிறைய நூல்களை இயற்றித்தர வேண்டும் என்பன நான் அவர்பால் கொண் டுள்ள மூவாசைகளாகும். என் னைப்போலவே தமிழ் மக்களும் ஆசைப்படுவார்கள் என்பதில் எத் துணையும் ஐயமிராது என்றே கருது கிறேன்.

சிறந்த சீர்திருத்தவாதியும், சென்னைத் தமிழ் எழுத்தாளர் சங்க உறுப்பினருமான உலக இயற் கைக் கவிஞர் வாணிதாசனை நான் விட்டுப் பிரியும்போது, "ரவுண்டு காபி குடித்துச் செல்லுங்கள் !" என்று பனி வெல்லத்தாலான கொஞ்சம் காபியைச் சற்று சூடா கக் கொடுத்தார். நாக்கு வேக்காட் டுடன் குடித்துவிட்டு வணக்கம் கூறி விடைபெற்றேன். அந்த 'வேக்காடு' என்னை இத்தனையையும் மறக்கா மல் எழுதத் தூண்டிற்று. அந்த 'ரவுண்டு காபி'யும் அதனை அளித்த கவிஞர் வாணிதாசரும் வாழ்க !

★

மதுரை தியாகராயா

[மதுரை, தியாகராயா கல்லூரியில், 8-11-54-அன்று திரு. தி. மாணிக்கவாசகம் அவர்கள் தலைமையில் 'மறு மலர்ச்சிக் கவிஞர்கள்' என்னும் பொருள் பற்றிப் பேசியதன் சுருக்கம்]

"எனக்கு முன்னல் பேசிய தலைவர் அவர்கள் 'திரு விழா'க்கள் பற்றி உங்களுக்கு ஒரு கருத்தை எடுத்துரைத் தார்கள். திருவிழாக்கள், மனித சமுதாயத்தில் பிளவு ஏற்படாம லிருக்கச் செய்யப்பட்ட கேளிக்கைகள் என்ருர்கள். இதை திராவிடக் கட்சியினர் எதிர்க்கிருர்கள் என்றும் கூறினர்கள். உண்மையில் திருவிழாக்கள் கேளிக்கைகள்தான் என்ருல் அதை யாரும் மறுக்க முடியாது. கேளிக்கை என்பது ஆர்ப்பாட்ட மும் உற்சாகமும் உல்லாசமும் கலந்தது. நமது திருவிழாக்களில் இது நடைபெற்றுத்தான் வருகிறது ! அம்மையையும் ஐயனையும் சோடித்துச் சிங்காரமாக வைத்திருக்க, அதைக் காணப்போகிற பக்தன், பக்கத்திலிருக்கும் பாவையைப் பார்க்க, பாவை, யாரும் கவனியாத நேரத்தில் சாடைகாட்ட- பக்தன் பக்திமீறி, கேளிக்கைக்கு இடம் தேட - இப்படிப்பட்ட கேளிக்கைகள், நமது திருவிழாக்களில் நடைபெற்றவண்ணம்தான் உள்ளன! நண்பர் குறிப்பிடுவது இதைத்தான் என்ருல், வாலிபர்கள் நிச்சயமாக இதை வரவேற்பார்கள் ! ஆனல் திருவிழா, பக்திக் கன்றோ முதலிடம் கொடுக்கிறது ! பக்திக்கும் கேளிக்கைக்கும் என்ன சம்பந்தம் ? பக்தி, புலன்களை அடக்கி, மோனநிலையில் ஏகமனதோடு செய்யப்படுவது என்று கேள்விப்பட்டிருக்கிறேன், இந்த மோனநிலையில் கேளிக்கைக்கு இடம் ஏது ! அல்லது கேளிக்கையில்தான் பக்திக்கு இடம் ஏது ! திருவிழா, வெறும் கேளிக்கைதான் என்ருல், தெய்வச் சிலை எதற்கு! எப்படியோ... நண்பர் இதைத் தவிர மற்ற கருத்துக்களைச் சொல்லும்போது, அவர் நமக்கு வெகுதூரத்தில் இல்லை என்பதை வெளிப்படுத்திக் கொண்டார். இன்னும் சிறிது நாளில் அவர் காஞ்சீபுரத்திற்கே வந்துவிட்டாலும் ஆச்சரியப்படமாட்டேன்.

மறுமலர்ச்சிக் கவிஞர்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, நண்பர் மாணிக்கவாசகம் அவர்கள், நான் 'பாரதியையும் பாரதிதாசனையு'ம்தான் குறிப்பிடுவேன் என்றும் கூறினர்கள். உண்மைதான். இந்தத் தலைப்போடு நம் கண்முன்னே நிற்கிற வர்கள் அந்த இருவரும்தான். பாரதி, சிறந்த கவி. வாழ்ந்த காலத்தில் வழிவகை இன்றி, வறுமையாலேயே மாண்ட கவி. அன்றைக்கு பாரதியைப் பெருங்கவி என்று ஒப்புக்கொள்ளவே 'கல்கி' போன்றவர்கள் மறுத்தார்கள். இப்போது அவர்கள் தான் மண்டபம் கட்டுகிருர்கள் ! காரணம், அவன் இறந்துவிட் டான் ! ஆனல் பாரதிதாசனை நாங்கள் அப்படி வைக்கவில்லை. அவர், வாழும் காலத்திலேயே வளமாக வாழ வழிசெய்து கொடுத்தார் என் தலைவர்; வரி வரியாகச் சொல்லி பாராட்டி ஞர்; புரட்சிக் கவிஞர் என்னும் புகழ்ப்பட்டயம் தந்தார். மாற்றுக் கருத்தினரும் கூர்ந்து கவனிக்குமாறு அவரைப்பற்றிக் கூறினர். பாரதி - பாரதிதாசன் இருவரும் சமுதாயத்தின் முன்னேடிகள். பாரதி, வறுமையில் வாடியதால்தான் நல்ல கவிதைகள் எழுதினன் என்று சொல்லப்படுகிறது. இது ஓரளவுக்கு உண்மைதான் எனினும். இதுதான் நல்ல கவிதை கிடைப்பதற்கு வழி எனக் கொள்வது பயங்கரமான முடிவாகும். உணவுக் கஷ்டம் இல்லாமலும், உல்லாசத்தில் மூழ்கி, கவிதையை விடாமலும் ஒரு கவிஞன் வாழ்வதற்கு எப்பொழுதும் வழி வகுத்துத் தரவேண்டும். மன்னர்கள் புலவர்களுக்கு வாரி வாரி வழங்கிய காலத்திலும் நல்ல கவிதைகள் தோன்றிக்கொண் டிருந்தன என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

சேர சோழ பாண்டியர்களுக்குப் பின்பும் சீதக்காதி என்னும் வள்ளல் வாரி வழங்கியதை தனிப்பாடல் குறிக்கிறது.

காய்ந்து சிவந்தது சூரியகாந்தி—கலவியிலே
தோய்ந்து சிவந்தது மின்னர் நெடுங்கண்—தொலைவில்பன்னூல்
ஆய்ந்து சிவந்தது பாவாணர் நெஞ்சம்—அனுதினமும்
ஈந்து சிவந்தது மால்சீதக்காதி இருகரமே !

என்கிருன், கவி. ஈந்து ஈந்து சிவந்து விட்டதாம் சீதக்காதியின் கைகள் ! ஆனல், அதைப் படித்தபின் வேறொரு கவிதையைப் படிக்கும்போது கண்ணீர் வருகிறது. "ஏன் படித்தேன் தமிழை" என்றொரு புலவன் அழுகிருன். எப்படி அழுகிருன் ? "அட கேடு கெட்டவனே ! பலதொழில் இருக்கப் போய் தமிழ் படித்தாயே ! அறிவில்லாதவனே ! கூத்தாட, கழையாட, செப் பிடுவித்தைகளாடத் தெரிந்தாயில்லையே ! தடதன வேசி யராய்ப் பிறந்தாயில்லையே! பெண்களிடம் (தாசிகளிடம்) இருந் தூது சென்று (தரகனக) வாழ்ந்தாயில்லை. என்ன சென்மம் எடுத்தாய் !" என்று தன்னைத் தானேநொந்துகொள்கிருன்.

திராவிடர் நாட்குறிப்பு

1955ம், ஆண்டு திராவிடர் நாட்குறிப்பு விரை வில் அச்சாகிக் கொண்டிருக்கிறது. மாவட்ட தி. மு. க. மற்றும் தி. மு. க. கிளைகள் இவற்றின் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர் பெயர்களை உடனடி யாகக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்கவும் :

'போர்வாள்' அலுவலகம்
பவழக்காரத் தெரு
சென்னை

கல்லூரியில் கண்ணதாசன்

> கண்ணதாசன் அவர்கள் சுற்றுப்பயணத்தில் இருப்பதால் இவ்வாரம் ' **பெரும்பயணம்** ' இடம் பெறவில்லை. அடுத்த இதழில் தவருமல் முழுபக்கமாக வெளிவரும்.

அடகெடுவாய் ! பலதொழிலும்
இருக்கக் கல்வி

அதிகமென்றே கற்றுவிட்டாய்
அறிவில்லாமல்

திடமுள மோகனமாடக்
கழைக் கூத்தாட

செப்பிடு வித்தைகளாடத்
தெரிந்தா யில்லை

தடதன வேசையராய்ப்
பிறந்தா யில்லை !

சனியான தமிழைவிட்டுத்
தையலர் தம்

இடமிருந்து தூதுசென்று
பிழைத்தா யில்லை

என்னசென்மம் எடுத்துலகில்
இரக்கின்ருயே !

என்று கதறுகிறுன். என்ன நேர்ந்தது? முன்பு இருந்த நிலை வாரி வாரி வழங்குதல் இல்லை. சோற்றுக்கே திண்டாட்டம், புலவனுக்கு - இது ஏன்? இருக்கலாமா? புலவர்கள் கௌரவிக்கப்படவேண்டும். தமிழாசிரியர் நிலை உயர்த்தப்படவேண்டும். கவிஞனின் கவிதைக்குச் 'செலாவணி மதிப்பு' ஏற்படவேண்டும். "இந்தா ! இந்தக் கவிதையை வைத்துக்கொண்டு 500 ரூபாய் கொடு" என்று கேட்டால் கிடைக்கவேண்டும். வசதி உள்ளவர்கள்தான் அதற்கு வழி செய்யவேண்டும்! கரு. முத்து தியாகராயருக்கும் அவரது புதல்வர்கள், சுந்தரம் - மாணிக்கவாசகம் இருவருக்கும் தமிழ்ப் பற்று அதிகம். வசதியும் ஏராளம். இவர்கள் அந்தப் பணியைச் செய்யவேண்டும்.

மறுமலர்ச்சிக் கவிஞர்கள் வரிசையில், பாரதி - பாரதிதாசனேடு, கவிமணி தேசிகவிநாயகமும் சேர்க்கப்பட வேண்டியவர். அவர் பாடிய கருத்துக்கள் பல, பகுத்தறிவுக்கு ஏலாதவை ஆயினும் பாடியவற்றை அழகாகப் பாடினுர். கவிநயம் அவரிடம் இருந்தது. திடீரென்று, அவர் காஞ்சிபுரத்தையும் கவனிக்கிறுர். "ஆண்டவனைக் கண்டது யார்?" என்று ஆத்திகர்களை வினவுகிறுர். எல்லாம் கொஞ்சநேரம்தான் - பின்னிவிட்டு ஓடிவிடுகிறுர். ஆனுலும் அவர் சிறந்தமறுமலர்ச்சிக்கவி.

இந்த வரிசையில் நாமக்கல் ராமலிங்கம் அவர்களைச் சேர்ப்பதற்கு, என் சிற்றறிவு ஒப்பவில்லை. அவர் நல்ல கவிஞர்தான் - இதுவரை நல்ல கவிதை பாடவில்லை; அவ்வளவுதான்! பாரதியின் எளிமை அடியோ, நயமோ, பாரதிதாசன் சொற்செட்டோ, கவிமணியின் உருக்கமோ, எதுவும் அவரிடம் காணப்படவில்லை. என்ன செய்வது! "ரயிலில் மெயிலில், ராத்திரி வண்டியில் இஞ்சினின் முன்னுல் இருட்டை விரட்டும் இரண்டு விளக்குகள் இருப்பதுபோல இரண்டு கண்களும் அவனையே பார்த்தன" என்று கவிதை (!) எழுதுகிறுர்! ரயிலாம்; மெயிலாம்; இஞ்சினும்! இஞ்சினுக்கு முன்னுல் இரண்டு விளக்குகளாம்! அதுவும் கண்களுக்கு இதை உவமிக்கிறுர்! எப்படி ஒப்புவது, கவிஞரென்று! சொன்னுல கோபிக்கிறுர்கள் - சொல்லாமலும் இருக்க முடியவில்லை!

கடைசியாக, இன்றைய மறுமலர்ச்சி உலகில் பல சிறந்த கவிஞர்களும் தோன்றி வருகிறுர்கள். முக்கியமாக வாணிதாசன முடியரசன் இருவரையும் பாராட்டவேண்டும்."

"புதையல்" பற்றி ஒரு அறிக்கை

சிவாஜி பிக்ச்சர்ஸ் என்ற படக்கம்பெனியார் '**புதையல்**' என்ற பெயரில் படமெடுக்கப் போவதாகவும், அதற்கான வசனங்களை நான் எழுதப்போவதாகவும் விளம்பரப்படுத்தி இருக்கின்றனர். 6 ஆண்டுகளுக்கு முன்பு வாகாப் காஷ்மீரீ என்பவருக்கு 'புதையல்' என்ற பெயரில் ஒரு கதை எழுதிக் கொடுத்தேன். ஆனுல் அது படமாக்கப்படவில்லை. இந்த விளம்பரத்திற்கும் எனக்கும் துளியும் சம்பந்தமில்லை என்பதை பொதுமக்களுக்கு தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கண்ணதாசன்

தாம்பரம், கிருத்தவக் கல்லூரியில்

கண்ணதாசன்

"கவிஞன், இயற்கையின் உறவினன். சூழ்ந்து நிற்கும் வேலிகளுக்குள் அவன் கட்டுப் பட முடியாது. இதைத்தான் பாடவேண்டும் என்று அவனுக்கு யாரும் ஆணை பிறப்பிக்க முடியாது. அவனது சிந்தனைக்கு எல்லை வகுக்க யாராலும் முடியாது. ஆகாயத்திலே உல்லாசமாகப் பறந்து வரும் வானம்பாடி அவன். கூண்டுக் கிளி சொன்னதைச் சொல்லும்; வானம்பாடி மனம்போலப் பாடும். பாரதி ஒரு வானம்பாடி. எவ்வெப்பொழுது என்னென்ன தோன்றுகிறதோ. அப்படி அப்படியே அவற்றைப் பாடி வைத்தான் பாரதி.

சொல்ல வருகிற கருத்து எதுவாயினும் அழுத்தந் திருத்தமாகச் சொன்னுன். தாக்க வேண்டும் என்று அவன் எதைப்பற்றியாவது கருதும் போது, கண்மண் தெரியாமல் தாக்கினுன். பாரதி, குடிசைகளில் மின்சார வெளிச்சம் ஏற்றினுன். சமுதாயம் அவனுக்குக் கடன் பட்டிருக்கிறது. பாரதி பார்ப்பனன் என்பதற்காக, அவனது சிறப்பை மறைக்கும் கண் மூடிகளல்ல நாங்கள். என் தலைவர் சொன்னது போல, "மாற்றுன் வீட்டு மல்லிகைக்கு மணமிருக்காது" என்று கருதும் கயவர்களல்ல நாங்கள். தனி ஒருவனுக்கு உணவில்லை எனில் சகத்தை அழிக்கச் சொன்னவன் பாரதி. இன்றைய பொது உடமை வாதிகளைக் காட்டிலும் அவன் ஒரு படி மேலே நிற்கிறுன். அல்லாவை, முருகனை, காளியை சாமுண்டியைப் பாடிய பாரதிதான், ஆயிரம் தெய்வம் உண்டென்பாரை அறிவிலிகள் என்றுன். இதற்கும் 'வானம்பாடி மனே பாவம்' தான் காரணம். பாரதி, பிற்காலத்தில் ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் என்ற கொள்கையைக் கொண்டிருக்கலாம் என்று நான் எப்போதும் கருதுகிறேன். இன்றிருந்தால், அவன் காஞ்சிபுரப் பாதையில் தான் நடப்பான். அவனது கவிதைகள் பல அதற்கு உதவியாகச் சாட்சி சொல்லுகின்றன."

வெற்றி யாருக்கு !

ஜார்ஜ் பெர்ஞட்ஷா என்ற ஆங்கில ஆசிரியர் எப்போதுமே குறும்பு செய்யும் மனிதர்.

ஷாவின் 'காண்டிடா' என்ற நாடகத்தில் வெகு நாளைக்குப்பிறகு கார்னிலியா ஒட்டிஸ் ஸ்கின்னர் என்ற நடிகை மீண்டும் நடித்தாள்.

'மிக நேர்த்தி. மகா உன்னதம்" என்று, ஷா, அவளுக்கு ஒரு தந்தி கொடுத்தார்.

நடிகை மனமுருகி விட்டாள். 'இவ்வளவு புகழுக்குத் தகுதியில்லை' என்று பதில் தந்தி கொடுத்தார்.

"நாடகத்தை அல்லவா குறிப்பிட்டேன்" என்று ஷா பதில் சொன்னுர்.

நடிகையும் விடவில்லை. "நானும் அதைத் தான் குறித்தேன்" என்று அவள் பதில் கொடுத்தாள்.

மார்கழி முதல் ஆர்ட் அட்டையில், அழகிய படங்களுடன்

"திராவிட சினிமா"

புத்தக வடிவில் வெளி வருகிறது :

ஆசிரியர்கள் :—

A. V. p. ஆசைத்தம்பி E. L. M. சௌந்திர பாண்டியன் :

விலை 2 அணு

விபரங்கட்கு :

திராவிட சினிமா
காரூக் கடைத் தெரு
விருதுநகர்

சிரிப்புத்தான் வருகுதைய்யா!

மனிதர்களில் ‘ சாம்பிராணி ’ களும் இருந்ததுண்டு. ஆனுல், சாம்பிராணிகளே சேர்ந்து ஒரு கழகம் அமைத்து வாழ்ந்ததாக வரலாற்றில் இல்லை ! இதோ ! அப்படிப்பட்ட ஒரு அருமையான கழகம், நமது கண்ணெதிரிலேயே உற்பத்தியாகி இருக்கிறது ! அதாகப்பட்டது நான் கூறுவதாவது : தமிழரசுக் கழகம் என்பதைப் பற்றி ! நாட்டிலே எத்தனை சாம்பிராணிகள் இருக்கிருர்கள் என்பதற்கு, இதன் உறுப்பினர் தொகையைக் கணக்கெடுத்தாற் போதும் ! அடாடா ! ஒவ்வொன்றும் ‘ தெள்ளுமணி ’ கள், போங்கள் !, “ மூனேமுக்கால் உறுப்பினர்களில் ‘ நாலே முக்கால் சாம்பிராணிகள் ’ என்கிற வீதாசாரம் இந்தக் கழகத்தில்தான் உண்டு. விலைபோகாத சரக்குகளெல்லாம் மூர்மார்க்கெட்டிற்கு வருவது போல, அழுகிப்போன காய்களெல்லாம் குப்பைத் தொட்டியில் விழுவதுபோல, கழுவிவிடப்பட்ட தண்ணீரெல்லாம் சாக்கடையில் சேர்வது போல, ஊரிலே கிடக்கிற மூக்கறுந்ததுகள், மூணுந்தரங்கள் எல்லாம் போய்ச் சேர்ந்துள்ள “ மாபெரும் கலாச்சாரக்கழகம்” இந்தக் கழகம்.

“ “ “

இதிலே ஒரு சிறிய சாம்பிராணி, தாலிப்பிரச்னையை முன்வைத்து வெளுத்து எடுத்து முதுகில் சுமக்கிறது ! (துணியை முதுகில் சுமப்பது எது என்கிற ஆராய்ச்சிக்குப் போக வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறேம்). தோழர் ‘ சிவஞானம் ’ இராசமாணிக்கனுர் அளவு சிலம்பிலே கரைகண்டவர் என்கிறது, ‘அது’

அந்த வள்ளலைத்தான் நாம் பார்த்தோமே ! சிலப்பதிகாரத்தை வைத்து இதுவரை சிவஞானம் ‘ஜோக்’ பண்ணி வந்தார் என்பதைத் தவிர, துளிகூட அவருக்கு அதில் பரிச்சயமில்லை என்பது உள்ளங்கைப் பரங்கிப் பழம்போல் தெற்றென விளங்குகிறது - ஔவைப் பிள்ளை சொன்ன மாதிரி, “ சிவஞானம் பாவம் ! இலக்கியத்தைப் பற்றி என்ன தெரியும்! ஏதோ...ஏதோ ” என்று இழுக்கத்தான் தோன்றுகிறது ! சிவஞானத்தையும் இலக்கியத்தையும் சம்பந்தப்படுத்தி யாராவது பேசினுல், தமிழ்ப் புலவர்கள் என்ன சிரிப்புச் சிரிக்கிருர்கள் என்கிறீர்கள். ஐயோ ! ஐயோ ! ஐயோ ! ஔவைப்பிள்ளை விழுந்து விழுந்து சிரித்தார் ! சுற்றி நின்ற மாணவர்கள் கைகொட்டிச் சத்தம் போட்டுச் சிரித்தனர். என்ன சொல்வேன் ! என்ன சொல்வேன் !

“ “ “

“ கண்ணதாசன், தனக்குத் தானே கவிஞன் பட்டம் கொடுத்துக் கொண்டார்!” என்கிறது அது. இது வரையில் தன்னைப்பற்றி எழுதும் போது அவர் பட்டத்தைப் போட்டு எழுதியதே இல்லை. இதுகள் கூட்டத்தில்இருக்கும்பல தகரடப்பாக்கள் வல்லின மெல்லினம் தெரியாமலேயே ‘ கவி ’ என்று கை எழுத்துப்போடுகிறதுகள் ! அந்தக்கவிதைகளைப் படித்து வாந்தி எடுத்த காரணத்தால், சுமார், ‘ அறுபத்திரண்டு பேர் ’ ஜெனரல் ஆஸ்பத்திரியில் இருக்கிருர்கள். (எப்படி என் புள்ளி விபரம் ! ‘ சிவஞான விவரம்போல் இல்லை ?) தி. மு. க. தோழர்களின் ‘ பாத தூசி’யைக் கொஞ்சநாள் கண்ணில் ஒற்றிக் கொண்டாலாவது இதுகளுக்குக் கவிதை எழுத வரும் !

“ சிலப்பதிகாரத்தில் கண்ணகி அருந்ததி போன்ருள் “ என்று தான் வருகிறதாம். “ அருந்ததி பார்த்தது ” வரவில்லையாம் ! எங்கிருந்தோ இரண்டு வரிகளைக் கேட்டு இதுவும் “ சிலப்பதிகார வெளிச்சம் போடப் பார்க்கிறது !” இந்தக் கண்டு பிடிப்பிற்கே, ஒரு ஜோடி “ டூப்ளிகேட் ராமர் ’ பரிசு வழங்கலாம்! “மாமுது பார்ப்பான் ‘ மறை வழி காட்டிட” என்றுலே ‘ மறை வழி’யில் அருந்ததி காட்டலும் ஒன்று என்பது இந்த இளஞ்சாம்பிராணிக்கு எப்படித் தெரியும் ! ஆரிய முறை, ஆரியர்களுக்குப் பிறந்த இதுகளுக்குத்தெரியவில்லை! திராவிடர்கள் கண்டு வைத்திருக்கிருர்கள்.

“ “ “

“ எங்கள் சிவஞானம் செய்த மடத்தனத்தை நீரும் செய்யலாமா?” என்கிற மாதிரி இது ஒரு இடத்தில் கேட்கிறது. பழைய உரையைச் சாமிநாதய்யர் பதிப்பித்தார் என்கிறது ! (இது யார் சொல்லிக் கொடுத்தார்களோ தெரியவில்லை ! அப்படியே சொல்லிவிட்டது !) பதிப்பித்த ஐயர், பல இடங்களில் சொந்தச்சரடு விட்டிருக்கிருர் என்பதும் இதுகளுக்குத் தெரியாது ! என்ன நுனிப்புல் கூட்டமையா இது ! இதுகள் போய் இலக்கிய விளக்கம் கூறுதுகளே என்ன ஆச்சரியம் ! டெரிபிள் ! டெரிபிள் !

“ “ “

“ தென்றலில் இலக்கணப்பிழைகள் மலிவு. கண்ணதாசனின்சொந்தப் பத்திரிகையில் இப்படிக் காணப்படுகிறது. அவரது மேற்பார்வையில் வெளியிடப்பட்டவை ! அவரது புலமையை நாமறிவோம்—நாடறியும் !” என்கிறது இந்த துண்டுச் சாம்பிராணி ! எழுதுவது, புரூப் படிப்பது முதலிய காரியங்களை மட்டுமே செய்துகொண்டிருக்க ‘ வேறு வேலையற்றவர்களல்ல, கழக எழுத்தாளர்கள் ! அவர்கள் மாதம் குறைந்தது பதினைந்து கூட்டங்களாவது பேசியாக வேண்டும். அதுவும் எப்படிப்பட்ட கூட்டங்கள் ? வருந்தி வருந்தி ஓடிவந்து அழைத்துப் போகிற கூட்டங்கள் ! (இதை ஏன் சொல்கிறேன் என்ருல், சிவஞானம், மதுரையில் ஒரு கல்லூரிக்கு தன்னை வைத்துக் கூட்டம் போடும்படி ஒரு வேண்டுகோள் கடிதம் விடுத்தாராம் ! அவமானம்! அவமானம் ! கண்ணகிக்கு அவமானம் ! கட்டபொம்மனுக்கு அவமானம் !) தி. மு. கழகத்தான், தூக்கத்தையும் விட்டு கழகப் பணி செய்தாக வேண்டும். அந்த முறையில் மாதத்தில் இருபது தினங்கள் அலுவலகத்தைகவனிக்க முடிவதே இல்லை. ஆகவே அச்சுப் பிழைகள் தென்றலில் காணப்படுகின்றன ! இதை விவாதத்திற்கு எடுத்துவைத்துக் கொள்கிறது இந்த டப்பா! இது எழுதிய கட்டுரையில்கூட, அருந்ததி, ‘ அருந்தறி’யாகவும், உளறல் ஊளறலாகவும் காட்சியளிக்கிறது !

“ “ “

நமது இலக்கிய ஞானத்தை இவர் அறிவாராம். கழுதைக்குத் தெரியுமோ கற்பூர வாசனை ! பன்றி அறியுமோ பனிமலர் வாசம் ! (இதெல்லாம் பழையமொழிகள் ! உவமை மட்டமாயிருந்தால், நானென்ன செய்வது !)

சுருக்கமாக இந்த நாட்டின் பரிதாபநிலை ஒன்றைக் கூறியாக வேண்டும். ஓடேந்த வேண்டிய பண்டாரங்கள் பேனுத் தூக்குவது இந்த நாட்டுக்கே உள்ள ஸ்பெஷல் ‘குவாலிபிகேஷன்’. ஒரு சிறு பண்டாரக் கூட்டமே ஓசிப் பேனு வாங்கிக் கொண்டு கட்டுரை எழுதி வருகிறது!. பேசாமல், ‘அவர்’ மாதிரி, “கார்ப்பரேஷனில் பள்ளிப்புத்தக அனுமதி, லஞ்சம் ரூ. 2000” என்று போர்டு போட்டுக்கொண்டு, இதுகள் வயிற்றுப் பிழைப்பை கவனிக்கலாம்! ஏன் பேனு தூக்கவேண்டும் ?

“ “ “

கடைசியாக சிவஞானத்திடம் கீழ் கண்ட கேள்வியைக் கொடுத்து எட்டு வருஷம் ‘டைம்’ கொடுப்போம். பதில் சொல்லுகிருரா பார்ப்போம் !

“ திருக்குறளில் ஒரே கருத்து எட்டு இடங்களில் எட்டுக் குறள்களில் வருகிறது ; அவை எவை ? இது எப்படி நேர்ந்தது ?”

எட்டு வருஷம் டைம் ! சொல்லட்டும் ! எங்கே சொல்லப் போகிருர். அவர் தான் பதிப்பகம் பதிப்பகமாக ஏறி இறங்கி வருகிருரே.

சிறு பொருள் விளக்கம் :

★ சீரகம் ★

சீரகச்செடி இந்திய உபகண்டத்தில் எல்லா விடங்களிலும் பயிராகின்றது. இதற்கு வாசனை உண்டு.

குணம்: —இதனுல் பித்த சாந்தி ஆகும். அரோசகம், வயிற்றுவலி, வாய்ரோகம், பிலீகநோய், சுவாசம், காசம், கல்லடைப்பு, சீதரத்த கிரகணி, கம்மல், வாதாதிக்கம். பீநச நோய், பைத்தியம், இவை விலகும். சரீரத்திற்கு வலுவைத் தந்து, கண்ணுக்குக் குளிர்ச்சியையும் உண்டு பண்ணும்.

வாந்தி யருசி குன்மம் வாய்நோய்ப்பி லீகம் இரைப்
பேந்திருமல் கல்லடைப்பி லாஞ்சனம் உட்- [சேர்ந்தகம்மல்
ஆசனகு டாரியெனும் அந்தக் கிரகணியும்
போசனகு டாரியுண்ணப் போம்.
வாயுவொடு நாசிநோய் வன்பித்தஞ் சேராது
காயம் நெகிழாது கண்குளிருந் - தூயமலர்க்
காரளகப் பெண்மயிலே கைகண்டதித் தனை [யுஞ்
சீரகத்தை நீதினமும் தின்.

வ-கு:—நன்ருய்ப் புடைத்தெடுத்த சீரகம் பலம் 5, இதை இஞ்சிச் சாற்றில் ஊறவைத்து உலர்த்திப் பிறகு முசுமுசுக்கைச் சாற்றில் ஒரு நாள் ஊறவைத்து உலர்த்தி எடுத்துக் கொண்டு, அத்துடன் ஏலம், சுக்கு, திப்பிலி, மிளகு, கோட்டம், நெல்லிமுள்ளி‘ நெற்பொரி, வில்வப் பழத்தோல் இவைகளின் சூரணம் வகைக்கு 2 வராகனெடை சேர்த்து ஒன்ருய்க் கலந்து சூரணத்துக்குச் சமன் வெள்ளைச் சருக்கரை சேர்த்து வேளைக்கு ஒன்று முதல் 2 வராகனெடை வீதம் தினம் காலை, மாலை இருவேளையும் கொடுக்க மேற்கண்ட ரோகங்கள் போம்.

சீரகத்தைக் கையாந்தகரைச் சாற்றில் ஊறப்போட்டு எடுத்த சூரணம் ஒரு வராகனெடை, சருக்கரை அரை வராகனெடை, சுக்குச் சூரணம் அரை வராகனெடை இம் மூன்றையும் கலந்து விதினமிரு வேளையும் உட்கொள்ள ‘காமாலை, வாயு, உட்சுரம் தீரும்.

சீரகம், சுக்கு ஏலம், நெல்லி முள்ளி இவைகளின் சூரணம் சமனெடை எடுத்து, அவ்வளவிற்குப் பாதி சருக்கரை சேர்த்துத் திரிகடிப்பிரமாணம் காலை, மாலை கொள்ளப் பித்தம் சாந்தியாகும்;

சீரகம், ஏலம், பச்சைக்கற்பூரம் இவைகளின் சூர்ணம் சமபாகம் எடுத்து, நேர்நிறை சருக்கரை சேர்த்துத் திரிகடிப்பிரமாணம் காலை, மாலை சாப்பிட மந்தவாயு தீரும்.

சீரகத்தைப் பொடித்து வெண்ணெயில் கொடுக்க எரிகுன்மம் நீங்கும்.

சீரகம், குறுந்தொட்டிவேர் சமனெடை கூட்டிக் கசாயஞ் செய்து சாப்பிட மூன்று நாள் 6 வேளையில் குளிர்சுரம் நீங்கும்.

சீரகம் பலம் 1, உப்பு தேவையான அளவு சேர்த்தரைத்து நெய் விட்டுத்தாளித்து, தேன் அல்லது சருக்கரையுடன், வாத பித்த ரோகங்களுக்கு உபயோகிக்கலாம்.

சீரகம் பலம் ஒண்ணரை இதைப் பழச்சாற்றிலரைத்து, நல்ல வெல்லம் பலம் ஒண்ணரை சேர்த்துப் பிசைந்து, புதுச் சட்டியில் அப்பி 3 நாள் வெயிலில் காய வைத்து எடுத்து வெருகடிப் பிரமாணம் காலை, மாலை 10 நாள் சாப்பிட, பித்தவெட்டை, மேகவெட்டை, கைகால் குடைச்சல்‘ எரிச்சல், குலை எரிச்சல் முதலிய நோய்கள் நீங்கும்.

‘ தம்பி ’

தம்பி அலுவலகம், சொந்தக் கட்டிடத்திற்கு மாற்றப்படுவதால், 20-11-54-ல் வர வேண்டிய இதழ் வெளிவராது. 27-11-54-ல் 12 பக்கங்களுடன் 3அணு விலையில் வருகிறது.

நிர்வாகி :
தம்பி அலுவலகம்
சிதம்பரம்.

அவனும் ஒரு ராஜா!

ஏ. கே. வில்வம்

எழில் மண்டிய சோலை. அழகிற்கு அழகு செய்வதைப் போல் அந்த சோலையின்இதயத்தைத் தொட்டபடியே தட்சசீலம் நதி புருவத்தை நெளித்துக் கொண்டு 'சல, சல' வென்ற ஓசையுடன் ஓடிக்கொண்டிருக்கிறது. வசந்தத்தின் தழுவலால் வண்ணமலர்கள் வாய்திறந்து சிரித்துக் கொண்டிருக்கின்றன; அந்தச் சிரிப்புடன் வெளி வந்த இன்ப மணத்தை சோலையெங்கும் வாரி இறைத்துக் கொண்டிருந்தது தென்றல், கதிரவனின் வெப்பம் புகமுடியாத அளவிற்கு அடர்ந்து செழித்திருந்த அந்தச் சோலையின் நடுவிலே ஒரு சிறுகுடிசை. அந்தக் குடிசையை அணைத்தபடியே ஒரு திண்ணை போடப்பட்டிருந்தது; அந்தத் திண்ணையின் மேல் ஒரு மனிதன்; முப்பது வயதை நெருங்கிக் கொண்டிருப்பான்; திண்ணையின் மேல் உட்கார்ந்திருந்தபடிதான் இருந்தானே தவிர அவன் உள்ளம் எங்கெங்கோ சுற்றியலைந்து கொண்டிருந்தது என்பதை முகம் சொல்லிற்று; அவன் முகமெல்லாம் எண்ணக் கோடுகள்; ஏதோ ஒரு பெரிய திட்டத்தை அவன் தனக்குள் உருவாக்கிக் கொண்டிருந்தான். திண்ணையைவிட்டு எழுந்து கூண்டுப்புலி போல் இப்படியும் அப்படியும் நடந்துகொண்டிருந்தான்; அவன் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும்-ஒவ்வொரு திட்டத்தை முடிவு செய்துகொண்டிருந்தது.

'குளிக்கச் சென்றவள் நேரமாகியும் என் வரவில்லை?' அவன்தனக்குள் சொல்லிக் கொண்டான்; மீண்டும் குடிசைக்குள் நுழைந்து ஒரு பெரிய பாத்திரத்தில் இருந்த 'சோமபானத்தை' ஒரு குவளையில் ஊற்றிக் குடித்துவிட்டுத் திண்ணையில் வந்தமர்ந்தான். சிறிது நேரத்திற்கெல்லாம், ஒரு பெண் நனைந்த ஆடைகளோடு குடிசையை நோக்கி வந்துகொண்டிருந்தாள்...!

"என் காமினி இவ்வளவு நேரம் - குளித்தாயா - அல்லது ஆற்று நீரையெல்லாம் குடித்துக் கொண்டிருந்தாயா!"

"இரண்டையும் செய்தேன்... ஆளைப் பார்...ஆற்றைக் குடிப்பதாம்!"

"கடலைக் குடித்த அகத்தியர் பரம்பரையடி நாம்... ஆற்றைக் குடிப்பதா பெரிய காரியம்!...

"ஆற்றையும் குடிப்பீர்கள்—கடலையும் குடிப்பீர்கள்...உலகம் ஏமாந்தால் அதையும் விழுங்கிவிடுவீர்கள்..."

விஷயமறியாத பெண்ணே... இன்னும் இந்தச் சாணக்கியனை நீ சரியாக உணர்ந்து கொள்ளவில்லை!"

"பார்த்தேனே உங்கள்வீரத்தை-நாட்டைவிட்டு நந்தன் விரட்டியடித்தானே...அப்போதே நீங்கள் மகா வீரர் என்று... தெரிந்துகொண்டேன்."

"சிறு பெண்-கேலி பேசுகிருய். பயத்தால் அல்ல புலி பதுங்குவது.. பாய்வதற்கு..."

"குள்ளநரிகூடத்தான் பதுங்குகிறது..."

"அப்படித்தான் வைத்துக்கொள்ளேன்...நான் ஒரு தந்திரசாலி... இல்லையா!...

"சரி—சரி நான் ஆடைகளை மாற்றிக்கொள்ள வேண்டும்... நனைந்த ஆடை அதிக குளிர்ச்சியாய் இருக்கிறது..."

"இப்படியே இருந்தால் இன்றெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கலாம்!"

"குளிக்கும் பெண்களை வட்டமிட்டுக் கொண்டிருந்ததால் தானே நந்தன் உங்களை நாடு கடத்திவிட்டான். இவ்வளவு விரைவிலே மறந்துவிட்டீர்களே"

"தெவிட்டாத காட்சி—தேவர்களாலும் மறக்கமுடியாதே... காமினி"

அப்பப்பா ... போகப் பூனை ... வழி விடுங்கள். நான் உடை மாற்றிக்கொள்ள வேண்டும்.

சாணக்கியன் அவளை விழுங்குவதைப்போல் பார்த்துவிட்டு விலகி வழி விடுகிருன்; உள்ளே சென்ற காமினி ஆடைகளை மாற்றிக் கொண்டு வெளி வருகிருள்.

'மறந்துவிட்டாயா காமினி... வழக்கம்போல் மது கொண்டு வருவாயே!' என்று கேட்கிருன். காமினி உள்ளே சென்று ஒரு கிண்ணம் மதுவைக் கொண்டு வந்து தருகிருள்...அவள் இதழ்பட்ட பின்தான் குடிப்பேன் என்று பிடிவாதம் செய்கிருன் அந்தப் பூணூல் அணிந்த இளைஞன்; இவள் எச்சில் பட்டபின் மதுவைச் சுவைத்துக் கொண்டிருக்கிருன். இப்படி 'சோம ரசத்தின்' சுவையுடன் காமினியின் இதழ் தரும் சுவையையும் ஒப்பிட்டுப் பார்த்துக் கொண்டிருக்கும்போது...

'சுவாமி' என்ற குரல் — அதுவும் ஒரு ஆண் குரல் கேட்டுத் திடுக்கிட்டு திரும்பினுன் சாணக்கியன். ஒரு இளைஞன்--கட்டுடல்--கவலை வடியும் முகம்--சாணக்கியன் அவனை வந்து நோக்கிவிட்டு--காமினி நீ உள்ளே போ--என்று குறியில் சொல்லிவிட்டு "இளைஞனே...யார் நீ!"

"ஒரு அனுதை"

"எங்கிருந்து வருகிருய்"

"வரவில்லை ஐயனே! விரட்டப்பட்டேன்"

"விரட்டப்பட்டாயா -- எங்கிருந்து தம்பி..."

"நந்தன் என்னை நாடு-கடத்திவிட்டான்"

நந்தன் என்று, வந்த இளைஞன் கூறியவுடன் சாணக்கியன் முகம் ஆச்சரியக் குறியாகி விட்டது. அப்படியென்ன குற்றம் செய்தாய் நீ...!

"ராஜத்துரோகம் செய்தேனும்"

நாடு கடத்தும் அளவிற்கு ராஜத்துரோகம் ஒன்றும் பெரிய குற்றமில்லையே! உன்பெயர்.

சந்திரகுப்தன்...!

"சந்திரகுப்தன்...சர்வ லட்சணங்களும் பொருந்திய பெயர்...ஒரு சாம்ராஜ்யத்தையே கட்டியாளலாம் அப்பா நீ! அவ்வளவு நல்ல பெயர்!

என்ன சுவாமி, நொந்துபோய் வந்திருக்கிறேன்...கேலி செய்கிறீர்கள்!

கேலியா... பரிதாபத்திற்குரியவனே ... என்னைத் தெரியுமா உனக்கு...

கேள்விப்பட்டிருக்கிறேன் பெருமா! முன்னுள் நந்தனுக்கு ராஜகுருவென்று...!

ஆம்! அரசு பலவற்றையும் ஆக்கவும்--அழிக்கவும் சக்திபெற்ற ராஜ குரு...ஆரிய குலத்திலகம்...

என்னை எப்படியும் காக்க வேண்டும். இனி உங்கள் காலடி செல்லும் பாதையில் நடக்கச் சித்தமாகிவிட்டேன், குருதேவா...

சந்தோஷம்...சஞ்சலப்படாதே, சங்கரன் துணைபுரிவார்; பசியாற்றிக் கொண்டு படுத்துறங்கு...காலை முடிவு செய்வோம்; நான் யோகாப்பியாசத்திற்குச்செல்கிறேன்" என்று கூறிவிட்டுக் குடிசைக்குள் நுழைகிருன் சாணக்கியன்.

★

அன்றிரவெல்லாம் அவன் தூங்கவே இல்லை; மங்கிய அந்த விளக்கொளியில் அவன் முகம் மட்டும் தெரிகிறது; அப்பப்பா—பயங்கரம்.. பெரியதொரு சூட்சிக்குத் திட்டமிட்டுக்கொண்டிருந்தான்; கிழக்கு வெளுக்கின்ற நேரம்—தூங்காமல் படுக்கையில் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்த காமினியிடம் சென்று, 'காமினி' என்றழைத்தான்...மெள்ள அவள் தோள்களையும் பற்றினுன்.

கோபத்தோடு சாணக்கியனின் கைகளைத் தூக்கி எறிந்தாள் அவள்.

"கோபமா...என் கோமளமே!"

ஆமாம் இரவெல்லாம் நீங்கள் மனக்கோட்டை கட்டிக்கொண்டிருங்கள்...நான் இங்கே தணலில் புரண்டு கொண்டிருக்கிறேன்...!

மனக்கோட்டையா அது... பைத்தியக்காரி! கொண்ட சபதம் முடிவதற்குள் கலைத்த தலையை சீவி முடிக்கமாட்டான் சாணக்கியன். அதிருக்கட்டும் இப்படி அருகில் வா.. எனக் கூறிக்கொண்டே அவளை நெருங்குகிருன்...!

அய்யோ...விடுங்கள்...காலை மலரப் போகிறது...இந்த நேரத்தில்...

என் காதல் மலர்கிறதே நான் என்ன செய்வேன்...!

ஆஸ்ரமத்து விதியோ...!

ஆமாம்...தேவர் தேவன் இந்திரனுக்கே...காமம் மலர்ந்த 'சுப' நேரமாயிற்றே இது...என்றுன் சாணக்கியன். பிறகு பேச்சில்லை.

'இச்-இச்' என்ற ஒலியுடன் பறவைக் கூட்டங்கள் சிறகடித்துப் பறந்தன. கீழ்வானம் வெளுத்துவிட்டது. சாணக்கியன் வெளியில் வந்தான்; கண்கள் சிவந்து காணப்பட்டன.

திண்ணையில் சுருண்டு கிடந்த சந்திரகுப்தனை எழுப்பினுன்.

சந்திரகுப்தா இன்னுமா உறக்கம்...சந்திரகுப்தன் உடலைவாரிக் கொண்டு எழுந்தான்; "சந்திரகுப்தா வாழத் தெரியாதவன் நீ! வாய்ப்பிருந்தும் நழுவவிடுகிருய்".

"என்ன தேவா—சொல்லுகிறீர்கள்?"

"உன்னை நாடு கடத்தியவன் வாழ்கிருன்; வாழலாமா?"

ஆமாம்; நினைத்தாலே நெஞ்சம் கொதிக்கிறது ... எரிமலையாகிறது...!

எரிந்தால் மட்டும் போதாது... அந்த எரிமலை வெடிக்கவேண்டும்; நந்தன் ஆட்சி அஸ்தமிக்கவேண்டும்; அதுதான் என் ஒரே ஆசை!

என் நீண்டநாள் கனவாயிற்றே சுவாமி அது! ஆனல்..."

"ஆபத்தான அந்த வார்த்தையை இங்கேன் இழுக்கிருய்..."

நானே அனுதை...நந்தனே... அணிதேர்ப் புரவி—ஆட்பெரும்படை இன்னும்..."

"போதும் நிறுத்து. எல்லாப்படையையும் இந்தச் சாணக்கியன் படை பொடியாக்கிவிடும்...நீ சரி என்று சொல்...பிறகு பார் இந்த சாணக்கியன் திறமையை."

உங்கள் வாய் அசைந்தால் இந்த நாய் ஆடக்கிடக்கிறது.

சந்திரகுப்தா கூர்ந்து கவனி நான் சொல்லப்போவதை எல்லாம். நாம் வாழும்போது...நம் எதிரி நந்தன் வாழ்வதே நமக்குப் பெருத்த அவமானம்-சகிக்கமுடியாத மானக்கேடு...அவனை எப்படியும் தொலைத்தாக வேண்டும்.

"அதற்கு வழி..."

அவசரப்படுகிருயே! கேள்.

கிரேக்க நாட்டைத் தெரியுமா உனக்கு?

கலைக்கூடமாயிற்றே அது...நன்ருகத் தெரியும்.

செலூகசை அறிவாயா குப்தா?

மாவீரன் அலெக்சாண்டரின் தளபதி...அறிவேன்! ஐயனே!

ஆம்! அவனிடம் நீ போகவேண்டும்.

தனியாக...!

அதற்குள் துடை நடுக்கம் வந்துவிட்டதா ... முட்டாளே...வாளேந்தியா செல்லுகிருய் நீ நடுங்குவதற்கு. இதைக் கேள்: செலுகசின் புகழ் பாடியதற்காக உன்னை நந்தன் நாடு கடத்திவிட்டான்என்று சொல். மாவீரன் செலுகஸை கோழையென்று கொலுமண்டபத்தில் கேவலப்படுத்தினுன் என்று துணிந்து பொய் சொல்; ஆரியத்தை எதிர்க்க முடியாமல் அலெக்சாண்டரே ஓட்டம் பிடித்தான்...என்று நந்தன் இறுமாப்போடு பேசினுன் என்று தூபம் போடு..கொதித் தெழுவான்-அனல் கக்குவான்; எழுச்சிமிக்க குதிரைப் படைகளுடன் கொஞ்சம் சேனையை அனுப்பினுல் நந்தனைக் கொன்று போடுவதாக உறுதி கூறு...பிறகு செலுகஸ் அனுப்புவான் சே... ...ளை. அழித்தொழிக்கலாம் நந்... ...ா... ஆளலாம் நாம்...!

'வெளிநாட்டானை அழைப்பதா குருதேவா! "கூடாத சந்தேகம் வேண்டாத கேள்வி! நான் இருக்க பயமேன்...புறப்படு ... இன்றே இப் பொழுதே" என்று ஆவேசத்தோடு கூறி முடித்தான் சாணக்கியன். சந்திரகுப்தன் புறப்பட்டுவிட்டான்.

''யாகம் இல்லாமல்-வேள்வி இல்லாமல்-பூஜை இல்லாமல் புயலை அழைக்கப்போகிறேன், உம்...... என்னை எதிர்த்து ஒருவன் வாழ்வதா இந்த மண்ணில்! அதுவும் மணிமுடியுடன். நாளை சூரிய அஸ்தமனத்துடன் என்னை 'தூசா'க மதித்தவனின் ஆயுளும் அஸ்தமிக்கப்போகிறது. இப்படியெல்லாம் தனக்குள் கூறிக் கொண்டே சாணக்கியன் உலவிக் கொண்டிருக்கிறான். உச்சி வானத்தில் நோய் கண்ட நிலவைப் பார்க்கிறான். கண் சிமிட்டும் தாரகையைப் பார்க்கிறான். உடனே சந்திரனை சாகசத்திற்கழைத்த தாரகையின் நினைவு வருகிறது. தாரைக்கு எங்குபோவது. ஆஸ்ரமத்தில் இருக்கும் அழகி...காமினி...ஆம். அவள் தான் அவனுக்குத் தாரை அகல்யா ...எல்லாம்...வேகமாக குடிசைக்குள் நுழைகிறான். மரக்கதவு மூடிக்கொள்கிறது.

மறுநாள் போரின் முழக்கம். செலுகசின் பேரிகை முழக்கம் கேட்டு வெளி வருகிறான் சாணக்கியன். நந்தனுக்கும் கிரேக்க சேனைக்கும் பெரும்போர். வாளுக்கு வாள்-வேலுக்கு வேல்-ரத்த ஆறு-பிணமலை-கழுகுகள் வட்டமிடத்தொடங்கி விட்டன. எழுச்சி மிக்க கிரேக்க குதிரைப் படைக்குமுன் நிற்க முடியவில்லை நந்தனால்; சந்திர குப்தன் மறைந்திருந்து ஒரு அம்பை விடுகிறான். அது நந்தனின் இதயத்தை பிளந்து கொண்டு ஓடுகிறது. நந்தனின் சேனைகள் ஓட்டம் பிடித்தன. நந்தன் மாண்டுபோனான் என்ற செய்தி கேட்ட சாணக்கியன். குடிசைக்கு எதிரில் ஒரு குழி தோண்டி...தீ வளர்த்து யாகம் செய்து கொண்டிருப்பதைப் போல் நடிக்கிறான். "சந்திரகுப்தனுக்கு ஜே!" என்ற முழக்கத்துடன ஆஸ்ரமத்தை நோக்கி சேனைகள் வந்து கொண்டிருந்தன. ஆஸ்ரமத்தை நெருங்கியதும், சாணக்கியனுக்கு ஜே! ஜே! என்ற குரல் வானை முட்டுகிறது.

வேள்வியில் இருந்து பூணூலை உருவியபடியே சாணக்கியன் எழுந்திருக்கிறான். சந்திர குப்தன் விரைவாக வந்து சாணக்கியன் கால்களில் விழுகிறான்.

"சந்திரகுப்தா. இப்பொழுதாவது உணர்ந்தாயா என் வல்லமையை......யாகத்தின் மேன்மையை..."

"முதலில் ஆசிர்வதியுங்கள் குருநாதா........."

ஆசி இருக்கட்டும்; முதலில் நம் வெற்றி குறித்து யாகம் ஒன்று செய்வோம். **ஆயிரம் பசுக்களை பலியிடவேண்டும். பதினாயிரம் அந்தணர்களுக்கு விருந்து நடத்த வேண்டும்.**

'' அரண்மனைக்குச் செல்வோம். அப்படியே செய்வோம் ... மறையவரே! அரண்மனை. சாணக்கியர் சந்திரகுப்தனுக்கு முடி சூட்டுகிறார். பிராமண போஜனம் நடைபெறுகிறது; வேதியர் பலரின் பாதங்களுக்கு பூஜை செய்கிறான் சந்திர குப்தன்; கடைசியில் சாணக்கியருக்கு ராஜகுரு ஆபரணங்களை அணிவித்து-பாதபூஜைசெய்து-ஆசிர்வதிக்கும்படி கேட்கிறான் குப்தன்.

"சந்திரகுப்தா..குப்தசாம்ராஜ்யம் ஸ்தாபித்து விட்டேன்; என் வேலை முடிந்தது நான் வருகிறேன்" இப்படி சாகசமாக கூறிப் பார்த்தான் அந்த ஆரிய சாணக்கியன்.

குருதேவா இனி நீங்கள்தான் அரச குரு;

"அதிகார போதையும்-சதிராட்டமும்-சரசிகளின் லீலைகளும் நடைபெறும் இந்த அரண்மனையில் என் காலடி படுவதே பாவம்-மனு ஓதிய நா-மன்னன் புகழ் பாடுவதே கூடாது. என்ன செய்வது தடை சொல்ல முடியவில்லை. ஆனால் ஒன்று. குப்தா! ஆட்சி இனி என் சொல்படிதான் நடைபெற வேண்டும் தெரிகிறதா?

நடையேது குருதேவா!

நான் ஆஸ்ரமத்தில் படித்துச் சொன்னேனே! 'அர்த சாஸ்திரம்' அதுதான் இனி குப்த சாம்ராஜ்யத்தின் சட்டநூல்; சரிதானே.

இதில் மறுப்புண்டோ பெரும்!

சரி வெற்றி விழா கொண்டாடுவோம். யாரங்கே கோமளவல்லிகள் எங்கே?

'' மாணிக்கக் கிண்ணங்களில் மதுவை நிறப்பிக் கொண்டிருக்கிறார்கள்" என்கிறான் ஒரு சேவகன்.

விரைவில் வரச்சொல் அந்த மரகதமணிகளை" என்று கூறுகிறான் சாணக்கியன். ஒரு டசன் ஆரிய அணங்குகள் அரை நிர்வாணத்தோடு கொலுமண்டபத்திற்குள்ளுக்கு நடைபோட்டு வருகின்றனர், இரண்டு அணங்குகள் இரண்டு கிண்ணமதுவைக் கொண்டுவந்து, சாணக்கியனிடம் ஒன்றையும்-சந்திர குப்தனிடம் ஒன்றையும் நீட்டுகின்ற

(3-ம் பக்கம் பார்க்க)

எஸ். சுந்தரம், மதுரை

ஷேக்ஸ்பியரை 'செகப் பிரியர்' என்றும், சாக்ரடீஸை 'சோக்ரதர்' என்றும் மாற்றுவதை மடத்தனம் என்று நீர் பதில் கூறியுள்ளீர். ஆனால், இது போன்று தமிழ்ப் படுத்தும் முறையை நாவலர்நெடுஞ் செழியன் அவர்கள் ஆதரித்துப் பேசியுள்ளார். இதற்கு என்ன சொல்கிறீர் ?

நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள், விஞ்ஞானக் கலைச்சொற்களைத் தமிழ்ப் படுத்துவது பற்றிக் குறிப்பிட்டதாகத்தான் நினைவு. மனிதர்களின் பெயர்களைத் தமிழ்ப் படுத்துவதை ஆதரித்ததாக நினைவில்லை. ஷேக்ஸ்பியரை 'செகப் பிரியர்'என்றும்சாக்ரடீஸை 'சோக்ரதர்' என்றும் மாற்றுவதன் மூலம் இந்த நபர்கள் வேறு யாருமோ என்ற சந்தேகம், மூலப்பெயரோடு நூலைப்படித்தவர்களுக்கு ஏற்படும். மேலும் நபர்களின் பெயர்களைத் தமிழ்ப்படுத்துவது எந்த வகையிலும் தமிழுக்கு உதவுவதில்லை. ஆச்சாரியார், சாக்ரடீஸை 'சோக்ரதமகாமுனி' என்றும் 'மகரிஷி' என்றும் எழுதுகிறார். இப்படி நபர்களின் பெயர்களைத் தமிழ்ப் படுத்துவதன்மூலம், மகரிஷி, மகாமுனி, சோக்ரத முதலியார், சோக்ரதநாயுடு என்றெல்லாம் சிலர் எழுத ஆரம்பித்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. நாவலர் அவர்கள் இந்த முறையை ஆதரித்திருக்க முடியாது. கலைச்சொற்கள் பற்றித் தான் அவர் குறிப்பிட்டார் என்று எனக்கு நினைவிருக்கிறது. (இதே கேள்வி கேட்ட வடுகபட்டி, சௌந்திரபாடின் அவர்களுக்கும் இதுவே பதில்.)

★

பி. பாலசுந்தரம், உறையூர், திருச்சி

நண்பர் ஒருவர், தான் எழுதிய ஒரு நாடகத்தின் இடையில் 'சேரன் செங்குட்டுவன்' என்ற சிறு நாடகத்தையும் இணைத்துள்ளார். இதில், செங்குட்டுவன், " வடவர்மீது போர் தொடுக்கிறோம் " என்று முழங்கும் போது, ஒவ்வொருவரையும் பெயரிட்டழைக்கிறான். அதில், "ஐம்பதாம் பத்துப் பாடிய பரணரே" என்று அழைக்கிறான். எங்கள் பாடத்தில், பரணர், ஐந்தாம் பத்துப் பாடியவர் எனக் காணப்படுகிறது. அவர் பாடிய ஐந்தாம் பத்தில், பதிகத்தில், சேரன் செங்குட்டுவன் வடதிசைப் போர் குறிப்பிடப் படுகிறது. அப்படியானால், சேரன் வென்று வந்த பிறகுதானே ஐந்தாம் பத்துப்பாடப்பட்டிருக்க வேண்டும்? பிறகு எப்படி சேரன், பரணரை, "...பாடியபரணரே"என்று அழைக்கிறான்?

பரணர் பாடியது ஐந்தாம் பத்துத் தான். நடிகர்கள், அவசரத்தில் வசனத்தை ஐம்பதாம்பத்து என்று பேசிவிட்டிருக்கலாம்: மொத்தம் பத்துப் பத்துகள்தான் உள்ளன: நிற்க அந்த ஐந்தாம் பத்தின் பதிகத்தில் மட்டும் வடதிசை வெற்றியைக் குறிப்பிட்டு, மற்றப் பாடல்களில் அதுபற்றி சிறிதுகூடக் கூறாமையால் பரணர் பாடிய இந்தப் பாடல் சேரன் செங்குட்டுவனைக் குறிக்கவில்லை எனவும், கடல் பிறகோட்டிய செங்குட்டுவன் வடதிசை வென்ற சேரன் அல்ல என்றும் அவனுக்கு முன்னால் வாழ்ந்தவன் என்றும் கா. சு. பிள்ளை அவர்கள் குறிப்பிடுகிறார்கள். இந்தப் பாடல் கடல்பிறகோட்டிய செங்குட்டுவனைப் பற்றிப் பரணர் பாடியதாகத் தான் காணப்படுகிறது. ஆனால் இதன் பதிகம் என்னவோ, வடதிசை வென்ற சேரன் செங்குட்டுவனைப் பற்றித்தான் பேசுகிறது: கா. சு. பிள்ளை அவர்கள் சொன்னது போல், இந்த ஐந்தாம் பத்தின் தலைவனான க. பி. செங்குட்டுவன் சேரன் செங்குட்டுவன் அல்லஎன்று கொண்டால் நாடகத்தில் வந்த வசனம் சரிதான்: ஏனென்றால் அதன் பிறகு வந்தவன்தானே சேரன் செங்குட்டுவன் ? அதற்குள் பரணர் ஐந்தாம் பத்துப் பாடியிருக்கலாமல்லவா ? ஆனால் பதிகம் எப்படி சேரன் செங்குட்டுவனது வடதிசை வெற்றியையும் முழுக்கக் கூறி முடிகிறது என்று கேட்கப் படும்; மேலும் இது சேரன் செங்குட்டுவனே கடல்பிறகோட்டிய செங்குட்டுவன் எனவும் முடிகிறது; இது நம் போன்றாரின் சிற்றறிவில் குழப்பத்தை ஏற்படுத்துகிறது. இதற்கு ஒரு சரியான முடிவும் புலவர்களால் சொல்லப்படவில்லை. சுருக்கமாக, கூறப்பட்டதிலிருந்து சேரன் செங்குட்டுவன்தான் கடல் பிறகோட்டிய செங்குட்டுவன் எனத் தெரிகிறது; கா. சு. பிள்ளை போன்ற அறிஞர்கள் முடிபு, 'இல்லை ; க. பி. செங்குட்டுவன் முன்னவன் ' என்கிறது. இந்தப் பின் முடிவை வைத்துப் பார்த்தால் நாடக வசனம் சரிதான்-

வி. நடராச சுந்தரம், தில்லைமாநகர்

தோழரே! நான் உமக்கொரு பரீட்சை வைக்கிறேன். இதில் நீர் தேருகிறீரா என்று பார்க்கிறேன்! " தளையவிழ்நாண்மாலைத்தாயரே" என்னும் பாடல், யார் பாடியது ? முழுப்பாடல் கூறிப் பொருள் தருக. 'மார்க்' 100 தரப்படும், சரியாகச் சொன்னால் !

அகோ ! தோழரே! நீர்மட்டுமா சோதிக்கிறீர் ? இப்பொழுது வருகிற கடிதங்களெல்லாமே என்னை மாணவனாக்கி சோதிக்கின்றன ! இந்த அனுபவம் எனக்கு உற்சாகத்தைத் தருகிறது ! இதோ ; உமது பரீட்சையில் நான் தேரிவிட்டேன். நீர் குறிப்பிட்ட பாடல் கம்பர் பாடியதாக தனிப்பாடற்றிரட்டில் காணப்படுகிறது. முழுப்பாடல் இது தான்:

தளையவிழ் நாண்மாலைத் தாயரேயாவி
களையினுமென் கண்டிறந்து காட்
டேன்-வளைகொடுபோம்
வன்கண்ணன் மாவிசயன் மால்யானை
தன்னெடும்வந்
தென்கண் புகுந்தா னினி!

பொருள் இதுதான்:

"அன்றெடுத்தபூக்களைச் சூடிய தாய்மார்களே! என் உடம்பை மெலியவைத்து, என் வளையல்களைக் கழல வைத்துச் சென்ற கொடியவன், மாவிசயனென்பவன், யானையில் ஏறிவந்து என் கண்களுக்குள் புகுந்து கொண்டான். நீங்கள் என்னைக் கொன்றாலும் நான் என் கண்களைத் திறந்து அவனை உங்களுக்குக் காட்டமாட்டேன்"

★

ஜனவரி 15உ முதல்

திரை

[வெள்ளித்திரை ஏடு]

பெரிய அளவில் ஏராளமான பக்கங்களுடன்!
திங்கள் ஒருமுறை - தித்திக்கும் 'திரை'!
பிரமிப்புத்தரும் அளவு படங்கள்!
இதுவரை இப்படியொரு பத்திரிகை வந்ததில்லை!

தனி இதழ் அணு 4.

பிரதியொன்றுக்கு 8 அணு வீதம் முன்பணம் கட்டக்கூடிய நாணயமான ஏஜண்டுகள்

எழுதுக:

நிர்வாகி: திரை
13, *நல்லண்ண முதலி சந்து,*
சென்னை-14.

இது ஒரு 'தென்றல்' வெளியீடு

இதோ தலைசிறந்த படங்கள்!

திருச்சி தஞ்சாவூருக்கு நாங்கள் விநியோகிக்கிறோம்

மதுராஸ் பிக்சர்ஸ்:
செந்தாமரை

கஸ்தூரி பிலிம்ஸ்:
மேனகா

பத்மினி பிக்சர்ஸ்:
முதல் தேதி

மற்றும்

கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி, சொர்க்கவாசல், நால்வர், பணம், ஆசைமகன், மாங்கல்யம், அம்மையப்பன்.

மற்றும் பல படங்கள்!

ராணி பிக்சர்ஸ்

திருச்சி.

அமோகமாக விற்பனையாகிறது!

பால்கோவா

(சிறுவர்களின் மாதமிருமுறை பத்திரிகை)

விலை. 1 அணு

விற்பனையாளர்கள் இல்லாத இடங்களில் விற்பனை யாளர்கள் தேவை.

பால்கோவா
சென்னை - 26

Edited and Published by Kannadasan, 13, Nallanna Mudali Lane, Madras-14. and Printed by R. M. Kanagasabapathy at Elangovan Printers, 23, Muthu Mudali St., Madras-14.